விலை சதம் 50

பக்கங்கள்—10

சுவையான ஐஸ்கிறீம் வகைகளுக்கும் கோழிப் புரியாணி நூடில்ஸ், பொம்பே சுவீட்ஸ் றிக்கோ பீடா வகைகளுக்கும்

றிக்கோ சுவீற்ஸ் அன் கிறீம் ஹவுஸ்

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். போன்: 464

★

# ஈழநாடு வார மலர்

* THE EELANADU VARAMALAR *

மில்க்வைற் வியாபாரிகளுக்கு

விசேட பரிசு

மில்க்வைற் 72 சவர்க்காரம் சுற்றிவரும் பெரிய உறை 50 அல்லது 36 சவர்க்காரம் சுற்றி வரும் சிறிய உறை 100 அனுப்பிப் பெரிய துவாய் ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மலர் 19 மார்கழி 10 முஹறம் 13 ஞாயிற்றுக்கிழமை [25—12—77] இதழ் 315

# தமிழ் அல்லது சிங்களம் ஒரு பாடமாகும்

## அடுத்த ஆண்டில் அமுல்

[கொழும்பு]

1978-ம் ஆண்டு தொடக்கம் நாட்டிலுள்ள சகல பாடசாலைகளிலும் 6ம் தரத்திலிருந்து 10 ம் தரம்வரை சிங்களமும் தமிழும் ஒரு பாடமாகக் கற்பிக்கப்படும். இந்த வகுப்புக்களில் படிக்கும் தமிழ் பிள்ளைகள் சிங்களமும், சிங்களப்பிள்ளைகள் தமிழும் கற்பார்கள்.

1978ம் ஆண்டு தொடக்கம் 80 ம் ஆண்டுவரை 6 ம் வகுப்பிலிருந்து 10ம் வகுப்புவரையிலான பாடத்திட்டத்தில் மேற்படி பாடங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்த வகுப்புக்களுக்கான பாடங்கள் வருமாறு;

சமயம், தாய்மொழி, சர்வதேசமொழி, விஞ்ஞானம், கணிதம், சமூகக்கல்வி, நுண்கலை, சுகாதாரம், தொழில், சிங்களம் அல்லது தமிழ். (ம)

எமது

நத்தார் வாழ்த்துக்கள்



இளம் பிறை யாம் எங்கள் ஏசு பிரான்
இரட்சகராய் வந்த இந்நாளில்
விளம் பர தாரர்கள் வர்த்தகர்கள்
வேண்டி படித் திடும் வாசகர்கள்
வளம் பெற வாழ்த் துவம்! வாஞ்சையுடன்*
வளர்க நம் நட்புகள் நீடூழி!

—வர்ணம்

# புதிய ராகம் கண்டுபிடிக்கும் இசைக் கலைஞருக்கு பரிசு

## தமிழிசைச் சங்கத்தில் எம். ஜி. ஆர். அறிவிப்பு

சென்னை, டிச. 24

தமிழ்நாட்டில் சிறந்த தமிழ்ப் பாடலாசிரியருக்கும் புதிதாக இராகம் ஒன்றைக் கண்டுபிடிப்பவருக்கும் தலா 5000 ரூபா பரிசு வழங்கப்போவதாகத் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி ராமச்சந்திரன் அறிவித்துள்ளார்.

தமிழிசைச் சங்கத்தின் 35ம் ஆண்டு விழாவில் சிறப்புரை நிகழ்த்திய முதல்வர் எம். ஜி. ஆர். இந்தப் பரிசுத் திட்டத்தை அறிவித்தார்.

நாதசுர இசைப் பயிற்சியில் திறமை காட்டும் இளைஞர்களுக்கு மாதம் 500 ரூபா உபகாரச் சம்பளப் பணம் வழங்கப்படுமென்றும் முதல்வர் அறிவித்தார்.

தமிழ்நாட்டில் 35 கலைஞர்களுக்குக் 'கலைமாமணி'ப் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

நடிகர் தேங்காய் சீனிவாசன், நடிகை ஸ்ரீ வித்தியா, அறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம் ஆகியவர்களும் அடங்குவர்.

## மாநகரசபை ஊழியர் இருவர் வேலை நீக்கம்

[யாழ்ப்பாணம்]

யாழ் மாநகரசபை ஊழியர்கள் இருவர் வேலைநீக்கஞ் செய்யப்பட்டுள்ளனர்.

யாழ் மாநகரசபையின் களஞ்சியத்தில் இடம்பெற்றதாகக் கருதப்படும் உபகரணத் திருட்டை அடுத்துக் களஞ்சிய உதவியாளரும், தொழிலாளி ஒருவரும் வேலைநீக்கஞ்செய்யப்பட்டுள்ளனர்.

வேலைநீக்க உத்தரவை யாழ் மாநகரசபை விசேட ஆணையாளர் திரு. க சிவஞானம் பிறப்பித்துள்ளார். [கா]

# டாக்டர்களின் காமன்வெல்த் உபகாரச் சம்பளம்

## யோகேஸ் கோரிக்கைக்கு பிரதமர் சம்மதம்

(கொழும்பு)

ஆறு வருடங்களுக்குட்பட்ட சேவையிலுள்ள டாக்டர்களுக்கு காமன்வெல்த் உபகாரச் சம்பளம் வழங்குவதில்லை என்றிருந்த நிலைமையை மாற்றுவதாகவும் இனியும் இப்படியான "கழுத்தறுப்புக்கள்" நடைபெறமாட்டாதென்றும் பிரதமர் திரு. ஜே ஆர். ஜெயவர்த்தன நேற்றுமுன் தினமிரவு தேசிய அரசுப் பேரவையில் அறிவித்தார்.

பேரவையில் ஒத்திவைப்புப் பிரேரணை மீது யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் பேசுகையில், டாக்டர்களுக்கு காமன்வெல்த் உபகாரச் சம்பளம் வழங்கப்படுவ

[10ம் பக்கம் பார்க்க]

# கான்ஸ்டபிள் கொலை. கடலுக்குள் சடலம்?

## பருத்தித்துறையில பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கொலைசெய்யப்பட்டு கடலுக்குள் எறியப்பட்டிருப்பதாகக் கருதப்படுகின்றது.

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கருணாரத்ன என்ற பொலிஸ் கான்ஸ்டபிள் நேற்று முன் தினம் மூன்று நபர்களுடன் சேர்ந்து குடித்ததாகவும், அதன்பின்னர் இவர்கள் மூவருக்குமிடையில் ஏற்பட்ட தகராறைத் தொடர்ந்து இவர் கொலைசெய்யப்பட்டு கடலுக்குள் எறியப்பட்டிருக்கலாம் என்றும் நம்பப்படுகின்றது.

இந்த மூவரும் மிக மோசமான நடத்தையுள்ள நபர்களென்றும், இவர்களுடன் சேர்ந்து பொலிஸ் கான்ஸ்டபிள் நன்றாக மது அருந்தியதாகவும் பின்னர் இவர்களுக்கு இடையில் சண்டை மூண்டதாகவும், கான்ஸ்டபிள் தாக்கப்பட்டு இழுத்துச்செல்லப்பட்டதாகவும் பொலிசாருக்குக் கிடைத்துள்ள சாட்சியங்களிலிருந்து தெரியவருகின்றது.

நேற்றுமுன்தினம் இரவு சுமார் 11 மணியளவில் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது. கான்ஸ்டபிள் கருணாரத்தின அப்பொழுது கடமையிலிருக்கவில்லை.

சம்பவத்தைக் கேள்விப்பட்டவுடன் பொலிஸ் அதிகாரிகள் ஸ்தலத்திற்கு விரைந்தனர். யாழ். பொலிஸ் அதி

[10ம் பக்கம் பார்க்க]

## றொட்டியில் இந்திராவின் படம்

பெங்களூர், டிசம்பர் 24

ஆந்திராவில் சமீபத்தில் ஏற்பட்ட புயல் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட றொட்டிகளில் திருமதி இந்திரா காந்தியின் படம் இருந்ததாம்.

இதனை மாநில சட்டசபையில் ஒரு உறுப்பினர் தெரிவித்தார். திருமதி காந்தியின் படம் இருந்தது மாத்திரமல்ல, காங்கிரஸ் கட்சிக்கு வாக்களிக்கும் படியும் கேட்கப்பட்டிருந்தது என்று அந்த உறுப்பினர் கூறினார்.

அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது

நத்தார்-புத்தாண்டு வாழ்த்துக்கள்!

வெங்காயம், மிளகாய் நல்ல காரம்!
அவற்றின் விளைச்சலோ அப்பாரம்!!
அவற்றை மேய வரும் பூச்சிகளோ சம்ஹாரம்!!!
இதுவே

அம்புஷ் 25

கிருமிநாசினி தரும் உபகாரம்!!!!
ஒரு ஏக்கருக்கோ 2 அவுன்ஸ் அம்புஷ் 25 போதுமானதே
விலையே ரூ. 35-00 மட்டுமே

மேலதிக விபரங்கட்கு:
விவசாய ஆலோசகர்:

த ரோரு லிமிட்டெட்,
32, கஸ்தூரியார் வீதி — யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 7651

அகதிகளுக்காக

# பரு. இ. போ. ச. ஊழியர் அளித்த நன்கொடை

(நெல்லியடி)

''எமது இலங்கையில் பல இனக்கலவரங்கள் நடைபெற்றுள்ளன. ஆனால் அண்மையில் நடைபெற்ற இனக்கலவரமே பெரிதும் பாரதூரமானதும் வருந்தத்தக்கதாகவும் அமைந்து விட்டது.

மேற்கண்டவாறு அகதிகள் புனர்வாழ்வுச் சபையைச் சேர்ந்த டாக்டர் எஸ். சுப்பிரமணியம் பருத்தித்துறை இ. போ. ச. ஊழியர்களினல் திரட்டப்பட்ட பணத்தொகையைப் பெற்றுக்கொண்ட போது கூறினர். வடபிரதேச கட்டுப்பாட்டதிகாரி திரு. ரி. நாகரட்ணம் தலைமையில் இந்த நிதியளிப்பு வைபவம் பருத்தித்துறை டிப்போ காரியாலயத்தில் 23 ம்திகதி காலை 10 மணிக்கு நடைபெற்றது தொடர்ந்தும்டாக்டர்எஸ் சுப்பிரமணியம்பேசுகையில்500குமேற்பட்ட குடும்பங்கள் அண்மையில் அகதிகளாக இடம் பெயர்ந்தார்கள் அவர்களில் சுமார் 250 குடும்பங்கள் மட்டில் தான் தற்சமயம் அகதிகளாக உள்ளனர். அரசாங்கம் 250 குடும்பங்களை பொறுப்பேற்று அவர்களுக்கு குடியேற்றநிலங்களை வழங்கியுள்ளது அகதிகள் புனர்வாழ்வுச்சபையே 500 குடும்பங்களுக்கு மேலான தொகையினரை வவுனியா மன்னர் கிளிநொச்சிப் பகுதிகளில் குடியேற்றியுள்ளது அவர்களுக்கு நாம் சுகாதாரவசதி மற்றும் சந்தைவசதிகள் விதைவசதிகள் போன்றவற்றையும் ஆயுதங்களையும் அளித்து வருகின்ருேம் அத்துடன் அவர்களுக்கு வாழ்க்கைச் செலவிற்கு பணமும் வழங்கவேண்டியுள்ளது உங்களைப் போன்ற தொழிலாளர்கள் ஒன்று திரட்டி இவ்வளவு பணத்தொகையை அளிப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். அகதிகள் எல்லோரையும் உங்கள் சகோதரர்களாக எண்ணுங்கள் இலங்கை அரசாங்கமோ இலங்கைப் பிரஜைகளான அகதிகளுக்கே நிலங்களை வழங்கி வருகின்றது. அகதிகளாக வந்தவர்களுள் இந்திய வம்சாவளியினரும் உள்ளனர் இவர்களை அகதிகள் புனர்வாழ்வுச்சபையே பொறுப்பெடுத்து உதவியளித்து வருகின்றது. இன்னும் 250 குடும்பங்களை குடியேற்ற வேண்டியுள்ளது.

ஒருகுடும்பத்துக்கு ரூபா 3500க்குமேற்பட்ட தொகை நாம் செலவு செய்ய வேண்டியுள்ளது. அத்துடன் அரசினல் பொறுப்பேற்கப்பட்ட அகதிகளுக்கும் நாமே அண்மையில் மண்வெட்டி கோடரி போன்ற ஆயுதங்களையும் வழங்கினேம் என்ருர்.

பருத்தித்துறை இ. போ. ச முகாமையாளர் திரு. பி. யு. மகாலிங்கம் பேசுகையில் அகதிகள் இலங்கையராக இருந்தால் என்ன இந்திய வம்சாவழியினராக இருந்தால் என்ன அவர்கள் எல்லோரும் எம்சகோதரர்களே நாம் இ. போ. ச.தொழிலாளர் பெருமளவு பணத்தை திரட்ட முடிவு செய்தோம். ஆனல் சிலதவிர்க்கமுடியாத காரணங்களால் அதுகைகூடவில்லை எனினும் 2700 ரூபாவைச் சேர்த்துவிட்டோம். இத்தொகையுடன் நாம் ஆறிவிடமாட்டோம். தொடர்ந்தும் அகதிகளுக்கு உதவிகளை வழங்க எமது தொழிலாளர் தயார்நிலையில் இருப்பதை இங்கு அவர்களின் முகங்கள் இருக்கும் மலர்ச்சியைக் கொண்டு அவதானிக்க முடிகின்றது. தொழிலாளர் ஒரு குழுவை தாமே அமைத்து அதிகளுக்கான உதவிகளை வழங்க முன்வரவேண்டும் என்ருர். நான் அதற்கான உதவிகளைப்புரியஎன்றும் பின்நிற்கமாட்டேன் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன் என்ருர்.

மேற்படி வைபவ ஆரம்பத்தில் தலைவரும் வட பிரதேச கட்டுப்பாட்டதிகாரியுமான திரு. நாகரட்ணம் பிரதேச காரியாலய! ஊழியர்களால் திரட்டப்பட்ட ரூபா 1085 பணத்தை டாக்டர் சுப்பிரமணியத்திடம் கையளித்தார் அதைதொடர்ந்து பருத்தித்துறை இ. போ. ச. ஊழியர்களால் திரட்டப்பட்ட 2700 ரூபாவை ஐக்கியதேசியக் கட்சிக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவரும் பொறியியல் பகுதி ஊழியருமான வீ கணபதி டாக்டர் எஸ். சுப்பிரமணியத்திடம் கையளித்தார்.

## புதிய கல்வித் திட்டத்தின்கீழ் க. பொ. த. ப. (சாதாரண) வகுப்புக்களில் மாணவர்களை அனுமதித்தல்-1978

N. C. G. E. பரீட்சைக்கு இரண்டு முறையும் தோற்றி சித்தியடையாத மாணவர்களிடமிருந்து புதிய கல்வித்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படவுள்ள விசேட க. பொ. த. ப (சாதாரண)வகுப்புக்களில் மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மேற்படி வகுப்புகளுக்கு புதிதாக அனுமதிபெற விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விபரங்களைப்பெற 9'' X 4'' சுய விலாசமிடப்பட்ட, முத்திரையொட்டப்பட்ட அஞ்சற்கூடு 30-12-77இற்கு முன் அனுப்பவும்.

மேலதிக பதிவாளர்.

த. ப. இல: 82,
யாழ்ப்பாணம். 8006

ஓம் சாயிராம்



திரு அவதார மூர்த்தியாம்

## பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா அவர்கள்

## டாக்டர் சபாரத்தினம் யோகேந்திரா

இளைப்பாறிய நீர்ப்பாசன பொறியியலாளர்
திரு. எஸ்.சபாரெட்ணம், திருமதி சிவா சபாரெட்ணம்
(வெள்ளவத்தை, 24, பிறன்சிஸ் ரோட்)

அவர்களின் புதல்வி

## செல்வி ரவீந்திராதேவி இராசதுரை

ஆகிய இருவருக்கும் 5-12-1977 இல் பெங்களூர் வெண்வயல் பிருந்தாவன க்ஷேத்திரத்தில் வைத்து தமது திருக்கரத்தால் மாங்கல்யம் வரவழைத்து திருமணம் நடத்தி வைத்தார்கள்.

இத் திருமணத்தின் தொடர்பாக

## மட்டக்களப்பு மாநகர மண்டபத்தில் புதன்கிழமை (28-12-1977) பிற்பகல் 4-30 மணியளவில்

நடைபெறும் வரவேற்பு வைபவத்திற்கு வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்பர்களையும், நண்பர்களையும், உறவினர்களையும் பணிவுடன் அழைக்கின்றோம்.

திரு. செ இராசதுரை,
திருமதி ராஜம் இராசதுரை
(பாராளுமன்ற உறுப்பினர்)
''தமிழகம்'', மட்டக்களப்பு.

(தனிப்பட்ட அழைப்புகள் வழங்கப்படவில்லை) 8010

## எவ்ரிபிரபு பாராட்டு

[கொழும்பு]

உலகின் பலநாடுகளில் மனிதஉரிமைகள் இன்னமும் மீறப்பட்டே வருகின்றன என்று இப்போழுது இலங்கையில் இருக்கும் ஏவ்ரி பிரபு கூறினர்.

உலகமன்னிப்பு இயக்கத்தைக் சேர்ந்தவரான இவர் நேற்று கூட்டமொன்றில் பேசினர்.

இலங்கை அரசு குற்றவியல் சட்டத்தை நீக்கியிருப்பதை அவர் பாராட்டினர். இது சமூகநீதியை உறுதிப்படுத்தும் என்ருர் அவர்.

# விரி விளம்பரம்

## விற்பனைக்கு

எழுதுமட்டுவாளில் 13 ஏக்கர் தென்னந்தோட்டம் விடு கட்டுவதற்கு வசதியாக, சந்தை, புகையிரத நிலையம், தபால்கந்தோர், பாடசாலைக்கு அண்மையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு இல. 22/1, விதானையார் வீதி, சுண்டிக்குளி. 7937

சுண்டிக்குளி விதானை வீதிக்கும் சுசமட்டை வீதிக்கும் இடையே உள்ள வீதியில் 1 1/2 பரப்புக்காணிவிற்பனைக்குண்டு விபரங்கட்கு ஆனந்தன், சுகி வாச் கட்டிடம், 615, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 7982

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை ரோட்டில் ஆனைப்பந்தி சந்தியிலிருந்து 200 யார் தூரத்தில் 4 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு வீடுகட்டுவதற்கு ஏற்றது விபரங்களுக்கு: ஆ. வேல்முருகன், கலைவத்தை ஒழுங்கை, காங்கேசன்துறை; 8004

அக்கோடியன், மெலோடிக்கன், அம்பிலிபயர் (Technic), என்லாச்சர்ஆகியன.தொடர்பு கொள்க: 159/A, ரெம்பிள் ரோட். நல்லூர். 8003

நெல்குத்தும் ஆலைக்குரிய (15HP, 10HP, 2HP) 2 கல்லர், தராசு. ஸ்ராட்டர் சுவிச்சுகள்(Starter switchers). அயன் சேவ் (Safe) ஆகியன விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: சுந்தரம் மில்ஸ், 180, கண்டிவீதி, அரியாலை, யாழ்ப்பாணம். 7991

## தேவை

பப்படத் தொழிலில் அனுபவமுள்ள இருவர் வேலைக்கு உடனே தேவை, நேரில் தொடர்பு கொள்ளவும். தயாபரன், முருகா ஸ்டோர்ஸ், வங்களாவடி, வேலணை. 7978

அனுபவமுள்ள நெசவு ஆசிரியைகளும், வேலைசெய்பவர்களும், மீன்பிடி உபகரண வியாபாரவிற்பன்னர்களும்,பிடவை வியாபார அனுபவமுள்ளவர்களும் தேவை. மணியம்ஸ், நவீன சந்தை, யாழ்ப்பாணம். 7997

## தேவை

நல்ல அனுபவமுள்ள கார் சாரதி தேவை. மாதச்சம்பளமும், சாப்பாடும், இருப்பிடமும் கொடுக்கப்படும். விண்ணப்பிக்கவும் அல்லது 25, 26-ம் திகதிகளில் (ஞாயிறு, திங்கள்) காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நேரில் சந்திக்கவும் இ. சரவணமுத்து,''சரவணகிரி,'' மல்லாகம் ரோட், புன்னாலைக் கட்டுவன் வடக்கு. 8005

கண்ணாடித் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ளவர்களும், வேலை பழகுபவர்களும் (Trainees) உடனடியாகத் தேவை. வேலை பழகுபவர்களுக்கு ஜனவரி மாதத்திலிருந்து நாளொன்றிற்கு ரூபா 6/-வரையில் சம்பளமாகக் கொடுக்கப்படும். நீர்வேலிக்கு கிட்டடியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. சேவி கிளாஸ் அன்ட் மெட்டல் வேக்ஸ், நீர்வேலி. 7799

## சோதிடம்

பிரச்சினைகளும், கடனும் தீர, திருமணம், தொழில், செல்வம்பெற உங்கள் பெயரெழுத்துக்களை கொண்டே அதிஷ்டசாலி ஆக்குவோம். முத்திரைக் கவர் அனுப்பி விபரம்பெறவும். காயத்திரி, அமிர்த வாசம், திருக்கேதீஸ்வரம். 8008

## கூட்டணி எம்பிக்களுக்கு எதிராக சுலோகம்

[நெல்லியடி]

தமிழர்விடுதலைக்கூட்டணியின் தேசிய அரசுபேரவை உறுப்பினர்களையும் தலைவர்களையும் கண்டித்து பருத்தித்துறை தொகுதியில் சுலோகங்கள் அதிகமாக ஒட்டப்பட்டுள்ளன. மக்கள் அதிகமாக கூடும் இடங்களில் இச்சுலோகங்கள் அதிகமாக ஒட்டப்பட்டுள்ளன. சிவந்த மையினுல் எழுதப்பட்ட இந்த சுலோகங்கள் மீன் சந்தைவீதி, அச்சுவீதி, சிவன்கோயில்வீதி (சனசமூக நிலையம்முன்) ஆகிய வீதிப் பகுதிகளிலும் ஒட்டப்பட்டுள்ளன.

அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது

நத்தார்—புதுவருட வாழ்த்துகள

உங்கள் உற்பத்திப் பொருட்களை விற்கவேண்டுமா?
உங்களுக்குத் தேவையான மாதிரிப் பொருட்களை வாங்க வேண்டுமா?

இன்றே விஜயஞ் செய்யுங்கள்

எஸ். பி. சாமி அன் கொம்பனி

72, 4ம் குறுக்குத் தெரு— 193, மின்சார நிலைய வீதி
கொழும்பு-11 யாழ்ப்பாணம்



# நத்தார் புது உடுப்பு!

## குமார் ஜோதிபாலா

மார்கழி மாதப் பனி மயிர்க்கால்களுக் கூடாகப் புகுந்து ஊசியாகக்குத்துகிறது. ஒருகணம் தாடை விறிர் விதித்து நடுங்குகிறது'

மரியம்மா தனது 7 நாள் குழந்தையை பழந்துணிகளுக்குள் புதைத்து குளிர்தாக்காமல் துவாலையொன்றினுல் போர்த்துகிருள். மழலை பாற்பசியால் அழுகின்றது. மார்புச்சட்டையின் பின்னை அவள் கழற்றினுள்.

"ஆராரோ ஆ ரா ரோ... ஓ...ஓ... என்ர செல்வராசா பாலைக் குடிச்சிட்டு சத்தம் போடாம நித்திரைகொள்ள வேணும் அச்சா... ராசா எல்லோ" கேட்டுப் புரியாத குழந்தைக்கு சொல்லித்தெரிய வைக்கின்ற தாய்மொழி.

தாலாட்டுப் பாடிக் கொண்டே இருந்தவள் குழந்தை தன்னை மறந்து தூங்குவதை மறந்து நினைவுப் புதருக்குள் புகுந்துவிடுகிருள். எலிசம் அக்கா அவள் ராசனைப் பெறப்போகும் முன்பே தந்திருந்த உடுப்பைத் தைத்துக் கொடுக்கவிடாமல் அவளுடைய ராசன் வயிற்றுக்குள் இருந்து உதைத்துக்கொண்டு வெளியே வந்து அவளை மினக்கெடுத்திவிட்டான். எலிசம் அக்கா ஆஸ்பத்திரியில் சுகம் பார்க்க வரும்போதே "மரியம்மா இந்தமுறை நத்தாருக்கு உன்னட்ட உடுப்புத்தைக்கத்தர நீ அதுக்கிடையில் இப்படி வந்து கிடக்கிறாய். நீ இன்னும் தைக்கிறதுக்கு துணிகளை வெட்டயில்லைதானே. நீ துணிகளைத் தா. நாங்கள் இந்தமுறை ட்ரேஸ்மலரிட்ட குடுத்துத்தைக்கிறம்" என்று கேட்டாள். மரியம்மா "இல்லை எலிசக்கா உங்களுக்கு நத்தாருக்குப் போட உடுப்புத் தந்தாச் சரி தானே! நான் 23-ம் திகதியே தாறன்."

"பிள்ளை பெற்ற பச்சை உடம்போட நீ என்னெண்டு தான்மெசின் ஆட்டப்போறாய். பிறகு உன்ர உடம்புக்குத்தான் கூடாது."

"எனக்கா எங்கட ஊரில பெம்புளைகள் பிள்ளைப்பெத்து மூண்டாம்நாத்து தாங்கள் தானே தங்களுக்குப் பத்தியம் அரைக்கிறதுகள். நான் மெசினுட்டிறுப்போல என்ன வந்திடும்!"

"அப்ப சரி, நீ எங்களுக்கு நத்தாருக்குப்போட உடுப்புத் தந்தாச் சரி." ஆஸ்பத்திரியில் பாயில் கிடந்தபடியே எலிசம் அக்காவுடன் கதைத்தவைகள் அவள் மனத்திரையில் சஞ்சரித்தது.

மெசின் ஆட்டி ஆட்டி அவளுடைய பச்சைவயிறு புண்ணாகி நொந்தது. "நல்லகாலம் வேதக்காரராகப் பிறந்ததால இப்பிடியெண்டாலும் பிள்ளை பெத்த 7-ம் நாத்திலேயே தைக்கமுடியுது. திட்டு அது இது எண்டு சொல்லுதுகள்" என்றும் நினைத்துக்கொண்டாள்.

மூத்தவள் ஜசிந்தாவுக்கு எட்டு வயது, அடுத்தவன் யோகரசாவுக்கு ஐந்து வயது. மரியம்மாவின் கணவன் சிலுவைதான் கடலோடு சங்கமிக்கும்போது மரியம்மாவின் வயித்தில் வளர்ந்தவனுக்கு கணவனின் பெயரையே அவனுக்காக்கிவைத்த .சிலுவை ராசனுக்கு ஏழே ஏழுநாள் வயதுதான்.

அவள் தான் மூன்று மாசமாக முழுகாமல் இருந்ததை அன்றைக்குத்தான் சிலுவையிடம் சொன்னாள். அப்போது சிலுவை அந்த முதல் இரவில் அவளைப் பார்த்ததுபோல அவளுடைய கண்களை ஊடுருவி இமைக்காமலே பார்த்துக் கொண்டிருந்ததையும் "இந்த வயிற்றில்தானு என்னுடைய குழந்தை" என்று இரவில் காதுக்கருகில் கிசுகிசுத்ததும் நேற்றைய சம்பவங்களாக இன்னும் ஒவ்வொரு அபிநயங்களும் தவறுமல் அவளுக்கு நினைவிருந்தது. விரல்களில் கணக்குப்பார்த்து "ஒன்று, இரண்டு, மூன்று" என்று எண்ணி, "சரியாக மார்கழியில் குழந்தை பிறக்கும் பாலன் பிறப்பன்றைக்கே நீ பெறுவாய் ஆம்பிளைப்பிள்ளை பிறப்பான்-பாலன் பிறந்த நாளும் நீ மகனைப் பெறப் போகும்நாளும் ஒரே நாளாயிருக்கவேணும்." ஆசையோடு சிலுவை இப்படிக் கூறியவைகள் அவளின் செவிப்புலனைச் சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருந்தது.

சிலுவை ராசன் பாலன் பிறப்புக்கு 20 நாள் முந்தியே பிறந்துவிட்டான். சிலுவை வள்ளத்தால் விழுந்து 'பப்ளர்' வெட்டி பிணமாகிப் போனது 7 மாசங்களுக்கு முந்தி.

மரியம்மா சிலுவை ராசனை நித்திரையாக்கிவிட்டு மெசினில் வந்து குந்தினுள். இரவு 9 மணிக்கு றேடியோவில் செய்தி வாசிப்புக்கு முந்தி விழும்'டணுனை,டணுனை...' விழுந்துகொண்டிருந்தது. கொட்டாவி விட்டாள் மரியம்மா. ஊசி சீலையில் ஓடுவதை அவளால் காணமுடியவில்லை. கை மடித்துக்கொடுத்த பகுதிக்குமேலால் ஊசி-ஏறக்கூடியதாக சுட்டுவிரல் ஊசிக்குத் துணியைக் கொடுத்துக்கொண்டேயிருக்கிறது. அசந்திருந்தவள் கையிலேஊசி 'படக்' கென்று ஏறுகிறது. 'ஊ.



வென்று கையை இழுக்கமுயல்கின்றாள். மெசின் ஊசி நகத்தையும் பிய்த்துக்கொண்டு கிழிறங்கிவிட்டது. உள்ளதோ ஒரே ஒரு ஊசி, அதையும் முறித்துவிட்டால் அதற்கு வேறு செலவு: கண்ணை மூடிக் கொண்டு காலை மறுபக்கம் மிதிக்கிறாள். விரல் கள்ளிடவே ஊசி மேலே வந்தது இரத்தம் சீறிப்பாய்ந்தது.

22 ம் திகதி இரவு அவள் எலிசமக்காவீட்டு உடுப்புக்களில் அரைவாசியைக்கூடத் தைக்கவில்லை அவள் எலிசமக்காவீட்டு உடுப்புக்கள் அவ்வளவையும் தைச்சுக்கொடுத்தாலே 30 ரூபா கூலியாகக் கிடைக்கும். அவ்வளவுக்கு எலிசமக்கா வீட்டு நத்தார் உடுபுடவைச்செலவுகள் அந்த 30 ரூபாவில்தான் மூத்தவள் ஜசிந்தாவுக்கு நல்ல ஒரு சீத்தை எடுத்து அழகானகுடை வெட்டுச் சட்டையும் யோகராசாவுக்கு கொஞ்சம் நல்ல துணியில் காற்சட்டையும் ஒரு சின்னச் சேட்டும் தைக்க வேண்டும்.

இனி அவளால் தைக்கமுடியாது உடல் அசதி. கால்களைத் தூக்கமுடியாமல் அடிவயிறு வலித்தது. கண்கள் துஞ்சியது. விரலில் மெசின் ஊசி ஏறி இரத்தம். "நாளைக்கு இரவு தான் இதுகளைத் தைக்கலாம். நாளையிண்டைக்குத்தான் எலிசமக்காவிட்ட காசு வேண்டலாம."

மரியம்மா பல நினைவுகளோடேயே குழந்தையை அணைத்துக்கொண்டுநித்திரையானுள்.

23-ம் திகதி காலையிலிருந்து இரவு பத்துமணிவரை மூன்று உட்பாவாடைகள், இரண்டு மெக்சி, ஒரு மிடி, அவைகளுக்குரிய மேல்சட்டைகள் அளந்துவெட்டி தைத்து முடித்துவிட்டாள். அந்தஇரவின்பத்து மணிக்கே எலிசமக்காவை எழுப்பி தைத்த உடுப்புக்களைக் கொடுத்து கூலியாக 30 ரூபாவை வாங்கிக்கொண்டால் முன்வீட்டு ரஞ்சிதம் நாளைக்கு காலமை உடுப்பெடுக்கப் போறன் எண்டவள், அவளிடம் என்ர ஜசிந்தாவுக்கும் ராசனுக்கும் துணிவாங்கக் கொடுத்துவிடலாம் என்று நினைத்தாள். இந்தச் சாமத்தில் சாமப்பேய்மாதிரி எலிசமக்காவை எழுப்பி உடுப்புக் கொடுத்தாலும் விளக்குவைச்ச பிறகு காசு தருவாளோ!

ஜசிந்தாவுக்கும் ராசனுக்கும் இந்த நத்தாருக்கு புது உடுப்புகளில்லை. எலிசமக்கா கடன் சொல்லிவிட்டாள். "மரியம்மா இந்தமுறை நத்தார் உடுப்புக்கெண்டு கணக்கச் செலவழிச்சிட்டன், நத்தார் செலவுக்குத்தான் ஒரு ஐம்பது ரூபா வைத்திருக்கிறன். நான் உடுப்புத் தைச்சகூலியை வருசப் பெருநாளுக்குமுதல் உனக்குத் தாறன்."


"இல்லை எலிசமக்கா அந்தக் காசிலைதான் என்ர ஜசிந்தாவுக்கும் ராசனுக்கும்..."

'எடி மரியம்மா நீ தையல்காரி உன்னிடம் இல்லாத உடுப்பே! பிறகேன் நத்தாருக்கெண்டு புது உடுப்புகள் பிள்ளைகளுக்கு"

அவளுடைய மனம் வீஸித்தது. புது உடுப்பின் மேல் விழுந்த மண் அவளின் நெஞ்சில் சரிந்தது. எல்லாத் தையல்காரிகளையும் போல அவள் துணி களவெடுக்கின்றதில்லை. மிஞ்சிவரும் துணிகளை அப்படியே எடுத்துக்கொடுத்துவிடுவாள்.

'இல்லை எலிசமக்கா இந்த முறை அதுகளுக்கு புது உடுப்புத் தைக்க வேணும்.'

எலிசமக்காவின் முகம்சுளித்தது. அவளின் கண்கள் மரியம்மாவை பகிடி பண்ணியது. 'ஏன் நாங்கள் உன்ரை கூலியைத் தராமல் கொண்டோடியா விடுவம். ஏதோ புருஷனுமில்லாமல் கஷ்டப்படுகிருள் என்று பாவம் பார்த்து உடுபுடவைகளைத் தைக்கத் தந்தால் ... அப்பிடியெண்டால் ஆஸ்பத்திரியில் உனக்குத் தந்த 15 ரூபாவையும் இதில் கழி நான் மிச்சக்காசை உன்ரை முகத்தில் எறியிறன் நாளையிண்டைக்கு.'



மாதாகோவில் மணி 'டாண்...டாண்...என்று இரவு 13 மணிக்கு அதிர்ந்தது. அமலஉற்பவியான தேவமாதா பாலனைப் பெற்றெடுத்துவிட்டாள். பட்டாசுகள் விடாமல் தொடர்ந்து முழங்கியவண்ணம் இருந்தன. வீதிகளில் புத்தாடை அணிந்தவர்களாக கோயிலுக்குப் போகின்றவர்கள் நிறைந்தார்கள்.

மரியம்மா புறங்கையினுல் கண்ணின் முத்துக்களை உடைத்துவிட்டாள். ஜசிந்தாவையும், ராசனையும் எழுப்பி இருந்த உடுப்புகளை உடல் கழுவி அணிவித்தாள். இருவரையும் முழங்காலிலிருத்தி விட்டு வேதப்பாட்டினை மெட்டெடுத்தாள்:

'காலத்தின் விண் மீன்
தோன்று முன்னே-உயர்
கடவுளிடம் நின்று
பிறந்த வார்த்தை

(9-ம் பக்கம் பார்க்க)

## என்றென்றும் எமைக்காரும்

இன்றிருந் தென்றும் அருள்-பொருட் செல்வங்கள்
லௌகீக ஆத்மீக வளர்ச்சி ஓங்கிக்
குன்றதென்ன எண்ணமதாலுயர்ந்து அஃதைக்
கூட்டுறவாற் செயலாக்கி உளப்பூரித்து
ஒன்றெனினும் நன்று - அதும் அன்றேசெய்து
ஒருகுலமாய் மனிதகுலம் உயர்ந்துவாழ
என்றென்றும் அன்பு எனும் சக்தியூட்டி
இருமையிலும் எமைக்காரும் யேசுபாலா!

"வன்னியூர்க்கவிராயர்"

## நத்தார் திருநாள்

சத்தியமே தெய்வம் தரணிக் கொளிநானென்(று)
இத்தரையில் வந்துசொன்ன யேசுபிரான்- உத்தமர்க்குச்
சுத்தநிலை ஈயவென்று தூயசிசு வானதினம்
நத்தார் திருநாள் நலம்.

அன்பே உடலாய் அறமுயிராய் வந்துலகின்
துன்பம் துடைக்குமுயர் தூயவனுர்-மன்னுருவின்
பாலகனுய் வந்தனரீப் பாலருகில் என்பதுவே
ஞாலமெலாம் போற்றும் நாள்.

—சோ. புவனேந்திரன்


## நீங்கள் மிளகாய் பயிர் செய்கிறீர்களா?

களை,பூச்சி, பங்கசுகளிலிருந்து உங்கள் பயிரைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள்

- விதைகளை யூனிஸோல் 1.5D தூளுடன் கலக்கவும்
- நாற்று மேடைக்கு "பிராஸிக்கோல் 20 D" பவுடரைத் தூவவும்
- "லஸ்ஸோ" பாவித்துக் களைகளை அழிக்கவும்
- "செவின்" பாவித்துத் தீங்கிழைப்பான்களை அழிக்கவும்

அபரிமிதமான விளைச்சலைப் பெற

மக்வூட்ஸ்' தரும் வழி இதுவே.

உங்கள் தேவைகட்கு:-

எஸ்.பி. சாமி அன் கோ

மக்வூட்ஸ் விவசாய இரசாயன விநியோகஸ்தர்கள்

193, மின்சார நிலைய வீதி — யாழ்ப்பாணம்

# தேடுகிறவர்களுக்கு மட்டும் அவர் ஒளியாக இருப்பார்!

ஜே. என். பாக்கியராசா

உலக சரித்திரத்திற்கே விளங்காத பெரும் புதிர் ஒன்று உண்டென்றால் அது கிறிஸ்துநாதர் தான்? அவர் பிறந்தது பிரசித்தமே இல்லாத ஒரு கிராமம்; சிறிய ஊர். அவர் தோன்றிய குலமோ உரோமையரின் ஆட்சியிலிருந்த ஆதிக்கமான அடிமை யூதகுலம். இந்த அடிமைக் கும்பலைவிட்டு அவர் தம் வாழ் நாட்களில் வெளியேறியதே கிடையாது. உலக ஞானிகளையோ, ராஜதந்திரிகளையோ, பெரிய வீரர்களையோ அறிமுகம்செய்து கொள்ளவேண்டும் என்று அவர் விரும்பியதுமில்லை. தமது வாழ்க்கையின் முதல் முப்பது ஆண்டுகளையும் நசரேத் என்ற ஒரு சிற்றூரில் கழித்தார். அந்தச்சிற்றூர் அந்நாட்டிலே ஒன்றுக்கும் உதவாது என்று ஒதுக்கப்பட்டிருந்தது அந்த முப்பது ஆண்டுகளாக அவரை யாரும் இனம் தெரிந்து கொள்ளவில்லை. தெரிந்துகொள்ளவும் ஒரு காரணமும் அவர்களுக்கிருந்ததில்லை.

முப்பது ஆண்டுகளும் முடிந்தன. பொதுஜனங்கள் மத்தியில் அவர்தோன்றினார். அவருடைய வாழ்க்கை திடீரென மாறுகிறது. பெரிய தலைவராக நிற்கிறார். ஆனால் அதற்குரிய ஆட்களோ, பொருட்களோ, படைவலிமையோ அவரிடம் இருக்கவில்லை. சாதாரண தொழிலாளரிடையிலே, தம்முடைய நேரத்தில் பெரும் பாகத்தைக் கழிக்கிறார். சமூகத்தில் வேண்டாதவர்கள் என்று ஒதுக்கப்பட்டவர்களையும், நோயாளிகளையும் தேடித் திரிகிறார். பாவிகளையும் தவறிப் போனவர்களையும் தேடி அரவணைக்கிறார், போதிக்கிறார். அவர்களிடையே அநேக அதிசயங்களை இயற்றுகிறார். தவறிப் போனவர்களையும் தேடித்திரிகிறார். அவர்களைக் கண்டிக்கிறார். இப்படியாக ஏறக்குறைய மூன்று ஆண்டுகள் கழிந்தன. அவரைச் சுற்றி தேசம் முழுதும் திரண்டு சென்றது.

அவருடைய இந்தப் போக்கு அநேகருக்குப் பிடிக்கவில்லை. விசேஷமாக யூத மதத்தலைவர்களுக்கு இது கொஞ்சமும் உடன்பாடாகவில்லை. ஆகையால், அவரைப்பிடித்து, பொய்க் குற்றஞ்சாட்டி, சிலுவையில் அறைந்து கொன்று விட்டார்கள். அந்தப் 'பெரிய மனிதர்கள்'; அத்துடன் காரியம் முடிந்துவிட்டது என்று நினைத்தது மிகப் பெரிய தவறாகப் போய்விட்டது. இறந்த மூன்றும் நாளிலேயே அவரைப் புதைத்திருந்த கல்லறை காலியாகத் திறந்துகிடந்தது. அவரோ உயிர்த்தெழுந்து தம் சீடர்களுடன் அந்தப் பழைய தொழிலாளருடன் இன்னும் நாற்பது நாள் உரையாடியும், அவர்களைத் திடப்படுத்தியும், உறுதிப்படுத்தியும் வந்தார். நாற்பதாம் நாள் அவர் தமக்குரியவர்களை ஒரு மேட்டிற்கு-மலைக்கு இட்டுச் சென்று அவர்களை ஆசீர்வதித்த பின், மேலே பரலோகத்திற்கு எழுந்து சென்றார். அவரைப் பிரிந்த துயரத்தாலும், சோகத்தாலும், பயத்தாலும் நிரம்பப்பெற்ற அச்சீடர்கள் வெளியே அவரைப் பற்றிப் பேசக்கூட மனவலிமையற்று இருண்ட அறைகளில் பதுங்கிக் கிடந்தார்கள். பத்து நாள் வரை தான் அப்படியிருந்தார்கள். 10-ம் நாள் தங்கள் குரு வாக்களித்தபடி புதுவரங்களையும், சக்திகளையும் பெற்று உடனே கிறிஸ்துவைப் பற்றி உலகெல்லாம் போதிக்கப்புறப்பட்டார்கள். அவர்கள் போதித்தவை உலகில் பரவாத இடமே இல்லை.

கிறிஸ்துவின் போதனையே ஒரு தனிவகை! அது வெறும் தத்துவமல்ல. அதில் அரசியல் சார்பு இல்லை. தர்மநெறியையும், தெய்வமறையையும் அது சார்ந்து நின்றது. உலக ஞானிகள் எதை வெறுத்தார்களோ அது அவருடைய போதனையில் இடம்பெற்றது. உலகப் போக்குக்கு எதிராகவே யேசுவின் போதனைகள் அமைந்தன. மனிதர் கண்களுக்கு நன்மை என்று பட்ட பலபலவற்றை அவர் எதிர்த்தார்; கண்டித்தார். உலகம்தான் உண்மை என்று மனிதர் நம்பினார்கள். கிறிஸ்துவோ கண்ணுக்குப் புலப்படாத உண்மையான உலகு உண்டு; அங்கே வாழ்வும், தாழ்வும், இன்பமும் எல்லையில்லாமல் உண்டென்றார். உலக வாழ்க்கையை அவர் வெறுக்கவில்லை; ஆனால் வரப்போகும் முடிவற்ற வாழ்வுக்கு ஒரு முன்னோடியாக இவ்வுலக வாழ்வு உள்ளது என்றால் கிறிஸ்துநாதர் மரித்து, உயிர்த்தெழுந்து இரண்டாயிரம் ஆண்டுகள் ஆகியும் இன்னும் அவரைப் பற்றிய புதிர் இருந்துகொண்டுதான் வருகிறது. எவ்வாறு தமது முதல் வாழ்வில் உலகத்திற்கு எதிர்மாறாய் இருந்தாரோ, அவ்வாறே அவர் அமைத்த திருச்சபையின் வாழ்விலும் இன்றைய உலகத்திற்கு அவர் எதிர்மாறாகவே இருந்துவருகிறார்.

தமது காலத்தில் மேன்மக்கள் என்று சொல்லப்பட்டவர்கள் மத்தியில் கிறிஸ்து தமது ஞாபகத்தை விட்டுச்செல்லவில்லை. உரோமை இராச்சியத்தின் சரித்திர ஆசிரியர்கள் அவரைப் பற்றிக் கவனம் கொள்ளவில்லை. அன்றைய அறிவாளிகள் அவரது போதனைகளை அறிந்துகொள்ளவில்லை. தேச அதிகாரிகளோ வென்றால் ஒரு சிறு குறிப்புகள் மட்டும் அவரது மரணத்தைப் பற்றி ஏடுகளில் வரைந்து வைத்தனர். யூத குலத்தலைவர்கள் அவர் பூமியின் முகத்தினின்று மறைந்ததையிட்டு மன நிறைவு கொண்டனர். அவரை மறந்துவிடுவதற்கும் தயாராயிருந்தனர். அவர் நிறுவிய சபை அவரது திருமேனி சிலுவையில் சின்னபின்னமாக்கப்பட்டது போல இன்றும் வாதைப்படுகிறது. எவ்வாறு அன்று யூதர்கள் பிரதம குருக்கள் சிலுவையடியில் நின்றுகொண்டு கிறிஸ்துவின் மரணத்தைப் பார்த்து மன மகிழ்ந்தனரோ. அவ்வாறே இன்றைய உலகமும் கிறிஸ்துவின் திருமறையின் வேதனையைப் பார்த்து மகிழ்கின்றது. உண்மையில் கிறிஸ்துநாதர் மற்றெல்லாக் காலங்களையும் விட இந்தக்காலத்தில்தான் அதிக உயிருடன் வாழ்கின்றார்.

எல்லா மக்களுக்கும் அவர் தேவை; ஒன்றில் அவர்களால் நேசிக்கப்படுவதற்கு. அல்லது சபிக்கப்படுவதற்கு, அவரையன்றி அவர்களால் இருக்க முடியாது. பழங்காலத்திலும் பற்பல பெரியோர் மக்களால் அதிகம் நேசிக்கப்பட்டிருக்கின்றனர். ஜூலியஸ்சீஸர் தமது படைகளால் நேசிக்கப்பட்டார், நெப்போலியன் தனது போர் வீரர்களால் நேசிக்கப்பட்டான். ஆனால் இன்று இப்பெரிய மனிதர்கள் சரித்திரத்துள் மறைந்துவிட்டனர். அவர்களது பெயரைக் கேட்டதும் எந்த மனிதனின் உள்ளமும் இன்று அன்பால் துடிக்

(9-ம் பக்கம் பார்க்க)

## விசித்திரமான கிறிஸ்மஸ் பரிசுகள்

### பிறந்த திகதியும் ஒரு பரிசு

ரொபேட் லூயிஸ் ஸ்ரீவன்சன் ஒரு பெரிய எழுத்தாளர். சாமோவாவில்இருந்த அவரது நண்பர் ஒருவரின் புதல்விக்கு ஒரு பெரிய கவலை, அச்சிறுமியின் பிறந்ததினம் நத்தார் தினத்தில் வருகிறது. கிறிஸ்மஸ் வைபவங்களின் சலசலப்பில் நண்பர்களும், உறவினர்களும் தனது பிறந்த தினத்தை மறந்துவிடுகின்றார்கள் என அச்சிறுமி வருந்தினள். ஸ்ரிவன்சன் அச்சிறுமியின் கவலையைப் போக்கினார். தனது பிறந்ததினமாகிய ஆவணி 29-ந் திகதியில் அச்சிறுமி தனது பிறந்ததினத்தைக் கொண்டாடலாம் எனச் சட்டபூர்வமாகப் பிரகடனம்செய்து எழுதப்பட்ட உயிலை சிறுமிக்கு கிறிஸ்மஸ் பரிசாக அளித்தார். 1945-ல் இறக்கும்வரை அப்பெண் தனது பிறந்ததினத்தை மகிழ்ச்சியாகக் கொண்டாடி வந்தாள்.

### வழக்கத்தில் வந்த உள்ளங்கி

இங்கிலாந்தில் கென்ற் மாகாணத்தில் முன்பு கிறிஸ்மஸ் பரிசாக பெண்களுக்கு செந்நிற பிளனல் உள்ளங்கிகளைக் கொடுப்பார்களாம். இந்த வழக்கம் அங்கு சுமார் 300 ஆண்டுகட்கு நீடித்ததாம்.

### காதலிக்கு ஏற்ற கணையாழி

பனிக்கட்டிகளின் மீது சறுக்கி விளையாடுவதில் அந்த அமெரிக்கச் சீமாட்டிக்குக் கொள்ளை ஆசை. அச்சீமாட்டியின் கணவர் ஒரு கோடீஸ்வரர். ஒரு கிறிஸ்மஸ் தினத்தின் போது பட்டை செதுக்கப்பட்ட பனிக்கட்டி பொருத்தப்பட்ட தங்கக் கணையாழியொன்றைத் தம் காதலிக்கு அன்பளிப்புச் செய்து மகிழ்ந்தாராம் அவர்.

### திறமையைப் பரிசோதிக்க ஒரு பரிசு

கோடீஸ்வரர் அன்ட்று மெலோனுக்கு இரு பிள்ளைகள். எயில்சா, பவுல் என்று பெயர். தமது பிள்ளைகளின் காசாளும் திறமையைப் பரிசோதிப்பதற்காக ஒரு கிறிஸ்மஸ் தினத்தில் 13,600,000 பவுண்களை அவர்கட்கு அன்பளிப்புச் செய்தாராம் அந்தக் கோடீஸ்வரர்.

### கௌரவமான பரிசு

பிஜிதீவில் நீங்கள் கிறிஸ்மஸ் தினத்தைக் கழிக்க நேர்ந்தால் அவ்வூர் வாசிகள் உங்களுக்குத் தரும் அன்பளிப்பு திருக்கைப் பல்லாகும். திருக்கைப் பல் அன்பளிப்பே பிஜி தீவில் மிகப்பெரிய கௌரவமாகக் கருதப்படுகிறது.

### அதிசய உலகில் அலிஸ்

லூயிஸ் கரோல் என்ற நூலாசிரியர் ஒரு சிறுமிக்கு நத்தார் பரிசு அளிப்பதற்காகவே அதிசய உலகில் அலிஸ் என்ற சிறுவர் கதையை எழுதினார். ஆயின் அக்கதை உலகப்பிரசித்தி அடைந்ததுடன் பல லட்சம் பிரதிகளும் விற்பனையாகியுள்ளன இன்றும் மேனாடுகளில் கிறிஸ்மஸ் பரிசாக சிறுமிகட்கு இந்நூலை வழங்கும் வழக்கம் இருந்துவருகின்றது.

### சவப்பெட்டி வந்தது

பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழ்மிக்க புலவர் யோண் டொன் என்பவருக்கு ஒரு கிறிஸ்மஸ்தினத்தில் வந்த பரிசைக் கண்டு அயலவர்கள் அதிர்ச்சியடைந்தனர். இந்தப் பரிசை அனுப்பியவர் புலவரேதான். ஒரு பெரிய லொறியில் சவப்பெட்டியொன்று கொண்டுவந்து இறக்கப்பட்டது. தனது இல்லத்தின் மண்டபத்தில் அப்பெட்டியை நிரந்தரமாக வைத்திருந்தார் புலவர். தமது இளமைக்காலத்தில் தீயபழக்கங்களில் ஈடுபட்டு மனம் போன போக்கெல்லாம் அலைந்த புலவர் முதுமைக் காலத்தில் தம்மைத் திருத்திக்கொள்ள அடிக்கடி மரணத்தை நினைத்துக்கொள்ள இந்த ஏற்பாட்டைச் செய்திருந்தாராம்.

தொகுப்பு;- சாமுவல் பெனடிக்ட்

எமது வாடிக்கையாளர்களுக்கும்
ஆதரவாளர்களுக்கும் மனப்பூர்வமான நத்தார் — புதுவருட வாழ்த்துக்கள்

றிக்கோ ஹோட்டல் விசேஷ அறிவித்தல்

என்றென்றும் சுவைப்பிரியர்களின் நன்மதிப்பைப்பெற்றுவரும் றிக்கோஸ்தாபனம்
இடவசதி போதாத அசௌகரியத்தைத் தவிர்க்கு முகமாக
சுவீற்மார்ட் ஆகவும் கிறீம்ஹவுஸ் ஆகவும் மாற்றப்பட்டுள்ளதால்
23-12-77 முதல் மதிய போசனம் மட்டுமே (கோழிப்புரியாணி) வழங்கப்படுகிறது
வழமைபோல் ஃ கட்லட் ஃ றோல் ஃ பற்றிஸ் ஃ பொம்பேசுவீற்ஸ் ஃ கேக்வகைகள் ஃ மஸ்கட்டுகள் ஃ ஐஸ்கிறீம் வகைகள் ஃ பாலுதா சர்பத்வகைகளுடன் கோப்பியையும் சூடாகவும் குளிராகவும் சுவைத்து மகிழலாம்
சுவீற்வகைகள் அன்பளிப்புக்கு ஏற்ற சுவீற் பெட்டிகள் (SWEET BOX) மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம்

றிக்கோ சுவீற்ஸ் அன் கிறீம்ஹவுஸ் Ricoh

370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல: 464

7990

# நம்மையே அவருக்கு அர்ப்பணிப்போம்!

மனிதனின் வாழ்விற்கு நம்பிக்கை என்னும் நறுமணமூட்டவே இயேசு மனிதனாய், மண்ணுலகில் பிறந்தார். நம்பிக்கையிழந்து மனவிரக்தியடைந்து, அதனால் சோர்வடைந்து துன்பத்திலுழலும் மனுக்குலத்தார்க்கு மகிமையான நம்பிக்கையளிக்கவே, இயேசு மனிதனானார் என்பதே கிறிஸ்மஸ்.

மக்களில் அநேகர் நத்தார் என்றதன் அர்த்தம் புரியாது கொண்டாட ஆயத்தமாகின்றனர். அதனாலேயே கிறிஸ்மஸ் விழாவிற்கான கோலாகலமான ஆயத்தங்களும் பகலவன் முன் பனி போலாகிறது. இறைவன் மனிதனானார் அவர் மனுஷீகத்தை ஏற்றிப்போற்றுவதே நத்தாராகும்,

அவர் பிறந்தவேளை தூதர் பாடிய "சமாதானம்" என்ற தெய்வீக ஊற்றை உள்ளங்களில் ஊற்றவே அவர் அவதரித்தார், ஒருவர் மேல் ஒருவர் அன்பையும் விருப்பையும் ஏற்படுத்தும் நோக்குடன் நாம் நத்தார் என்னும் நன்னாளை நினைவு கூரவேண்டும். ஆனால் இவ்வேளை நம் நிலையையும் சிறிதாராய்தல் நன்றல்லவா? நாம் ஒருவர் மேல் ஒருவர் அன்பாய் இருக்கிறோமா? விருப்புடையோராய் வாழ்கிறோமா? சமாதானம் என்பதொன்றுண்டா?

இது இவ்விதமிருக்க கந்தை பொதிந்து மந்தைக்குடிலில் வந்தமையை இயேசுவின் மனுஷீகத்தைப் போற்றித் துதிப்பதே நத்தாரின் நடுமையாகும். அவர் ஒரு குடிலிலே தான் பிறந்தார். புல்லணை என்ற முள்ளணையிலேதான் கிடத்தப்பட்டார். அவருக்குக் கட்டிலுமில்லை! மெத்தையுமில்லை. தாழ்மையின் ரூபமாய் பிறந்தார். ஆனால் நாமோ, நம்மை செல்வத்தால் செல்வாக்கால், புகழால் உயர்த்தத் தெண்டிக்கிறோமல்லவா? நம்மையே நாம் பிரபல்யமாகப் பிரகாசப்படுகிறோமல்லவா? ஆனால் இயேசுவோ தம்மைத் தாமே தாழ்த்தினார்.

ஏழ்மைக் கோலமாய், தாழ்மையின் ரூபமாய், மந்தைக் குடிலிலே வந்தவர். நம்பிக்கையற்றோரின் வாழ்வையும் கடல் நடுவே கப்பல் போன்று, அலைக்கழிபடும் அநேகரின் வாழ்வையும் கரைசேர்க்க, அவர் உதயதாரகையாகத் தோன்றினார் என்பதை இந்த நத்தார் நன்னாட்களில் மறத்தல் நன்றல்ல,

மனமுடைந்து கவலை என்னும் வலையில்பட்டு, பயமென்னும் கயவனால் கட்டுண்டு, அழகிழந்து, அல்லலுறும் அநேகருக்குச் சௌந்தர்யமளிக்க பள்ளத்தாக்கின் லீலியாய் தோன்றினார். சமாதானமின்றிச் சஞ்சலத்தால் நிறைந்து மனமடிவோடு வாழும் அநேகருக்குச் சமாதானமளிக்கச் சமாதானப் பிரபுவாய் தோன்றினார். அறிவுரைபுகட்ட யாருமின்றி வெறுமை என்னும் விஷக்கிருமியால் பாதிக்கப்பட்டோரை ஆதரித்து ஆறுதல் மொழிகளை அள்ளியிறைக்க ஆலோசனைக்கர்த்தராய் அவதரித்தார். தனிமை என்னும் கோட்டையைத் தகர்த்துத் தரைமட்டமாக்கி இறைவன் நம்மோடுஇருக்கிறார் என்பதை நிருபிக்க இம்மானுவேலாய் வந்துதித்தது மட்டுமல்ல அவர் நம் மங்களில் வாழ வாஞ்சிக்கிறார் என்பதையும் இந்நன்னாட்களில் மறத்தல் நன்றல்ல,

நாம் பாவிகளாய் இருக்கையிலே கிறிஸ்து-யேசு நமக்காக மரித்ததனால் இறைவன் நம் மேல் வைத்த அன்பை விளங்கப்பண்ணினார். தமது ஏக புத்திரனாகிய இயேசுவையே இந்நிலவுலகிற்கு அனுப்புமளவிற்கு மனுக்குல மீது இறைவன் அன்புகூர்ந்தார். மேலும் இயேசு தமது வாழ்வையே நமக்காக அர்ப்பணித்ததனால், அவருடைய அன்பின் ஆழ, நீள, அகல உயரம் இன்னதென்று அறிந்துள்ளோம்-இவைகளெல்லாம் வேதாகம உண்மைகள்.

எனவே கிறிஸ்மஸ் என்பதன் பொருளறிந்து, அதன் அர்த்தத்தை உணர்ந்து. இறைவன் இயேசுவின் கரங்களில் நம்மை அர்ப்பணித்து வாழ-இந்நன்னாட்களில் அவரருளை வேண்டுவோமாக. அதுமட்டுமல்ல மண்ணுலகில் பிறந்து, மன்னுயிர்க்காய் தன்னுயிரை அர்ப்பணித்து மரணத்தை வென்று மறுபடியும் மண்ணுதி மன்னனும், ஆளுகை செய்யவரும் இறைவன் இயேசுவின் ஜனனதின வெகுமதியாக, நம்மையே அவருக்கு அர்ப்பணிப்போமாக.

—மரியநாயகம்
மனுவேல்பிள்ளை

## கர்த்தரே கருணைசெய்வீர்!

சிந்தையில் செபித்தேன் யேசுபிரானே
சீர்நிலை தந்திடுவீர் - நான்
நொந்திடும் வேளை நேரிலெழுந்தே
நன்மைகள் ஈந்திடுவீர்!

கற்றிட நானே கருணை மொழிகளே
கர்த்தரே கூறிடுவீர் - நான்
வெற்றியில் வாழ வீர வழிகளே
விருப்புடன் விளக்கிடுவீர்!

தாரணி யெங்கும் தண்ணொளி தந்தே
தானிய வகை ஈந்தே - பசி(ப்)
போரணி வென்றே பொங்கிடப் பாலைகள்,
பேரருள் புரிந்திடுவீர்!

நெஞ்சினில் என்றும் நேசர் உம்மையே
நினைத்தெழில் செய்திடுவே - என்
மிஞ்சிடும் தேன்சுவைத் தமிழ்நிலை தனையே
மீட்டிடவருள் தருவீர்!

உத்தமர் உம்மை உள்ளத்திருத்தியே
உண்மையின் ஒளியினிலே - நான்
ஏத்திடும் கவிகள் என்றும் இனிக்கவே
இன்னருள் ஈந்திடுவீர்!

நேசன்--நாரந்தனை


அன்பர்கள், ஆதரவாளர்கள், விற்பனையாளர்களுக்கு
நத்தார் - புத்தாண்டு வாழ்த்துக்கள்
விவசாயப் பெருமக்களே! பாவனையாளர்களே!!
- பசளை வகைகள்
- உணவுப் பொருட்கள்
- பாலுணவுகள்

அன்றாடப் பாவனைப்பொருட்கள்
தொகையாகவும் சில்லறையாகவும் பெற யாழ். நகரில் சிறந்த ஸ்தாபனம்!
எஸ்.வி. முருகேசு
[இலங்கை உரயாக்கக் கூட்டுத்தாபன விநியோகஸ்தர்கள்]
151, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 504

எங்கள்
வாடிக்கையாளர், அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எங்கள்
நத்தார் - புதுவருட
வாழ்த்துக்கள்
அலங்கார, ஆடம்பர, விநோத விளையாட்டுச் சாமான்களும் மற்றும் சகல வித பாவனைப் பொருட்களும், நெற்குற்றும் மாவு அரைக்கும் இயந்திரங்களும் அதன் உறுப்புகளும்
மலிந்த விலையில் பெற்றுக்கொள்ள இன்றே விஜயம் செய்யுங்கள்.
எங்கள் விளம்பரத்தை
(25-12-77 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5-15 தொடக்கம் 5-30 வரை இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பில் கேட்டு மகிழுங்கள்.)
ராஜு ஸ்ரோர்ஸ்
போன்] 372] 67 & 69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [தந்தி [ராஜு

அனைவர்க்கும் அன்புகலந்த
நத்தார்-புதுவருட நல்வாழ்த்துக்கள்!
★ கவர்ச்சியான இழை
★ சொகுசான ஓட்டம்
★ நீடிய பாவனை
★ உத்தரவாதமுள்ள வேலைப்பாடு
ஆகியவற்றுக்கு உங்கள் தேய்ந்துபோன டயர்களை எம்மிடம் புதுப்பியுங்கள்
நோர்தேண் இண்டஸ்றீஸ்
8/1 ஸ்ரான்லி ரோட், (போன்: 7158) யாழ்ப்பாணம்.

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது அன்புகலந்த
நத்தார் - புதுவருட வாழ்த்துக்கள்
சுத்த சைவ போஜனசாலை
ஸ்ரீ தாமோதர விலாஸ்
239, கே.கே.எஸ். வீதி—யாழ்ப்பாணம். ஹலோ: 7065

அன்பான எமது வாடிக்கையாளர்களுக்கு
நத்தார் - புதுவருட நல்வாழ்த்துக்கள்
நங்கையரை என்றும் யௌவனமாய்த் திகழச்செய்வது நவநாகரிக ஆபரணங்களே !!
நவநாகரிக தங்க,வைர நகைகளுக்குப் புகழ்பெற்ற ஸ்தாபனம்- சிறந்த வேலைப்பாடுகளுக்கும் நவநவமான டிசைன்களுக்கும், ஓடர் நகைகளைக் குறித்த நேரத்தில் பெற்றுக் கொள்வதற்கும் நம்பிக்கையான ஸ்தாபனம்-
செ. சிவபாதலிங்கம் (வைரக்கல் நகை வியாபாரம்)
220, கஸ்தூரியார் வீதி — யாழ்ப்பாணம்

ஆவியுலகத் தொடர்பு—16

# இறக்கு முன்பே ஆவி உடலுடன் பயணம் செய்தோர்!

வி. ரவிச்சந்திரன்

மரணம் அடைந்தவர்கள் தங்களின் உடலைப் போன்ற தோற்றமுடைய வேறு நுண்ணிய உடலுடன் இருக்கிறார்கள். அந்த நுண்ணிய உடலான ஆவி உடலுடன் இயங்குகிறார்கள் என்பதைப் பார்த்தோம். ஆனால் மரணம் அடைவதற்கு முன்பே ஆவி உடலுடன் சஞ்சரித்தவர்களும் உலகில் உள்ளனர். நம்முடைய இந்த உடலை விட்டு காலியாக உள்ளவேறு உடலில் புகுந்து அந்த உடல் மூலம் செயல்படும் கூடுவிட்டுக்கூடு பாய்தல் என்றமுறை இந்தியாவில் இருந்ததாகப் பரம்பரையாக வரும்-கதைகளும் புராணங்களும் தெரிவிக்கின்றன.

புராதன இந்தியாவில்வாழ்ந்திருந்த பதினெட்டு சித்தர்களில். ஒருவர் திருமூல நாயனார் என்பவர். இவர் சிறந்த சிவயோகியும் ஆவார். அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர். நந்திதேவரின் அருள்பெற்றவர். அஷ்டமா சித்திகளில் வல்லவர் என்று கூறப்படும் இவர் 3000 பாடல்களைக் கொண்ட ஒருநூல் எழுதியுள்ளார். அது திருமூலர் திருமந்திரம் என்றே வழங்கப்படுகிறது இவர் பொதிகமலையில் இருந்த அகத்தியரைக்காண விரும்பி கைலாயத்திலிருந்து புறப்பட்டார். வழியில் பல சிவத்தலங்களைத் தரிசித்துவிட்டு காவிரியாற்றில் நீராடி திருவாடுதுறையை அடைந்தார். அவ்வூரில் மாடு மேய்த்துக்கொண்டிருந்த மூலன் என்ற இடையன் இறந்துகிடப்பதையும், பசுக்கள் பிரிவாற்றாமையால் அவ் விடையனின் உடலை முகர்ந்து கொண்டிருப்பதையும் கண்டு மனமிரங்கி பசுக்களின் துன்பத்தை போக்குவதற்காகத் தனது உடலை ஒருபக்கம் மறைத்து, கூடுவிட்டுக் கூடுபாயும் வித்தையின் மூலம் மூலனின் உடலில் புகுந்து பசுக்களை வீடுநோக்கி ஓட்டிச் சென்றார். அவரை மூலனின் மனைவி தன் கணவன் என்று நினைத்துத் தொடமுயல இவர் எட்டி நின்று என்னைத் தொடுவது நீதியல்ல என்றுகூறவே மூலனின் மனைவி அவ்வூர் நீதிமான்களிடம் சென்று முறையிட்டு வழக்காடினாள். நீதிமான்கள் மூலரைப் பெரிய சிவயோகி என்று தெளிந்து கூறியதும் அவள் நீங்கிச் சென்றாள். ஆனால் மூலர் தன்சொந்த உடலைத் தேடியபோது அது கிடைக்கவில்லை. எனவே மூலன் என்ற இடையனின் உடலில் இருந்து திருமூலர் என்ற பெயரில் பாடல்களை இயற்றினார் என்று அவரது வரலாறு கூறுகிறது.

திருப்புகழை இயற்றி திக்கெட்டும் தமிழ்மணம் கமழச் செய்த அருணகிரிநாதர் பாரிஜாதமலர் என்னும் அபூர்வ மலரைக் கொண்டுவருவதற்காக தன் உடலை விட்டுக்கிளி ஒன்றின் உடலில் புகுந்து பறந்து சென்றாரென்றும், இதற்கிடையில் வஞ்சகர்களால் அவர் உடல் அழிக்கப்பட்டதால் அவர் கிளிவடிவிலேயே நிலை பெற்றாரென்றும் புராணம் கூறுகிறது.

இந்திய தத்துவ ஞானத்தில் சாங்கியம் - யோகம் என்னும் இரண்டு பிரிவுகள் உள்ளன. இதில் சாங்கியம் வற்புறுத்துவது ஞானத்தை. யோகம் வற்புறுத்துவது தியானத்தை.

இந்த யோக மதத்தை முதன் முதலில் வரையறுத்து விளக்கியவர் பதஞ்சலி என்பவர். பதஞ்சலி காலத்திற்கு முன்பே யோக மதம் ஸ்தாபிக்கப் பட்டுவிட்டதாகச் சிலர் கருதுகின்றனர். ஆனால் பதஞ்சலி இயற்றிய யோக சூத்திரம் என்ற நூலே யோகத்தைப்பற்றி இன்று நமக்குக் கிடைத்திருக்கும் நூல்களில் பழமையானது. யோக சூத்திரத்திற்கு கி. பி. 4-ம் நூற்றாண்டில் வாழ்ந்த வியாசர் தலைசிறந்த வியாக்கியானம் எழுதியுள்ளார் இந்த யோகத்தில் பிராணயாம்— தியானம் — யோக ஆசனம்— சமாதி நிஷ்டை என்று பல அம்சங்கள் உள்ளன. இவைகளை ஒரு மனிதன் முறைப்படி செய்யும்போது சமாதி நிஷ்டை நிலையில் அவனது ஆவிஉடல்வெளியேறி நினைத்த இடங்களுக்கு சென்று மீண்டும் ஸ்தூல உடலில் புகுந்து கொள்ளும் அற்புதமான நிகழ்ச்சி நடைபெறுகின்றது இதை அனுபவ பூர்வமாக உணர்ந்தவர்கள் பலர் உள்ளனர் அவர்களில் இரண்டு பேரைப்பற்றிப் பார்ப்போம் :-

பாண்டிச்சேரி அகில இந்திய வானொலி நிலையத்தில் அறிவிப்பாளராகப் பணிபுரியும் ''நடாதூர் நம்பி'' என்றழைக்கப்படும் வரததேசிகன் என்பவருக்கு இத்தகைய அனுபவம் ஒருமுறை ஏற்பட்டது. தியானத்தில் இருக்கும்போது ஒரு சமயம் உடலெங்கும் தேள்கள் கொட்டுவதைப் போன்ற வேதனை பரவ ஆரம்பித்தது. சிறிது நேரத்திற்கெல்லாம் ரத்தம் கலந்த வியர்வை வழிய ஆரம்பித்தது. ஆனால் அது உடனே நின்றும் விட்டது. இவர் திடீரென்று தன் உடலைத் தானே பார்த்தார். பிறகுதான் அவர் ஆவி உடலில் இருக்கும் நிலை அவருக்குப் புரிந்தது. அச்சமயம் வெளியூர் ஒன்றில் இருக்கும் மனைவி தான் இருக்கும் இந்நிலையை அறித்தால் என்ன நினைப்பார் என்று ஒரு கணம் சிந்தித்தார். அவ்வளவுதான் அடுத்தவினாடி தன் மனைவியின் அருகில் அவர் நின்றிருந்தார். மனைவியிடம் பேச முயன்றார் இவர் பேசுவதையோ அருகில் நிற்பதையோ அவர் மனைவி உணரவில்லை. ஆனல் ஏதோ ஒருசக்தி தன்னை இழுப்பதைப்போல் உணர்ந்தார். பிறகு அவரது ஸ்தூல உடலில் ஆவி உடல் தானாக இணைந்து விட்டது (இருவரும் ஒரு அனுபவப்பட்ட ஆவி உலக மீடியம் இவர் தன் அனுபவங்களை மையமாக வைத்து 'மரணத்தின் பின்' என்னும் நாடகத்தைத் தயாரித்து பாண்டிச்சேரி வானொலி வாயிலாக அளித்துள்ளார்.)

தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள விழுப்புரம் என்ற நகரில் ஜவஹர்லால் நேரு வீதியில் நாவிதராகப் பணிபுரியும் முனுசாமி என்ற பக்தர் யோகத்துறையில் நிறைந்த அனுபவம் பெற்றவர். இவர் இந்திய ராணுவத்தில் சில காலம் பணியாற்றியபோது மேற்சொன்ன அனுபவம் இவருக்குஏற்பட்டது அஸ்ஸாம் மாநிலத்தில் டெக்கு லக்கன்பூர் என்ற முகாமில் இருந்த போது ஒருநாள் இரவு தியானத்தில் ஆழ்ந்தார். சமாதி

[9ம் பக்கம் பார்க்க]

சமாதானம், மீட்சி, ரட்சிப்பு

# இதற்காகவே ஏசு பிறந்தார்!

க. தங்கம்

குழந்தை பிறந்தது.

உலகத்தில் ஒவ்வொரு நாளும் ஏராளமான குழந்தைகள் பிறக்கின்றன. ஆனல்; யேசுராசா பிறந்தது போல் எவருமே பிறக்கவில்லை.

பத்தொன்பது நூற்றுண்டுகளுக்குமுன்பு பெத்தலகேம் என்ற இடத்தில் கன்னி மரியாளுக்குப், யோசேப்புக்கும் குழந்தை யேசுராஜா பிறந்தார்.

மாட்டுத் தொழுவத்தில் பிறந்த யேசு பாலகனை வான சாஸ்திரிகள் சிலர் விசேஷ நட்சத்திரத்தைக் கண்டு தரிசிக்க வந்தார்கள். அவர்கள் யேசுபாலன் பிறந்த இடத்துக்கு வந்து சாஷ்டாங்கமாக விழுந்து பணிந்தார்கள். தாங்கள் கொண்டுவந்தபொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும் பணத்தையும் காணிக்கையாக கொடுத்தார்கள்.

'ஏன் இந்தக் குழந்தையை சாஸ்திரிகள் சாஷ்டாங்கமாய் விழுந்து வணங்கவேண்டும்?

உலகத்தில் பிறக்கும் எல்லாக் குழந்தைகளையும் எல்லாரும் விழுந்து வணங்குகிறார்களா!

இந்தக் குழந்தைக்கு இவர்கள் ஏன் காணிக்கை கொடுத்தார்கள்?- இதைக் குறித்து ஏசாயா என்னும் தீர்க்கதரிசி முன்கூட்டியே கூறிவிட்டார். நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார். 'கர்த்தத்துவம்' அவர் தோளின் மேலிருக்கும் 'கர்த்தத்துவம்' என்றால் ஆளுகை அல்லது அரசாட்சி என்று அர்த்தமாம்!

ஆகையால் இந்த யேசு பாலகனை இவர்கள் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கக் காரணம் ஆளுகை, அரசாட்சி இவரில் இருந்ததே. இராஜாவை அல்லது தெய்வத்தைத் தான் குடிமக்கள் வணங்குவார்கள். இயேசுக் கிறிஸ்து 'ராஜா' மாத்திரமல்ல 'தெய்வமும் கூட' தெய்வமே மானிட அவதாரமாக, பாலகனாக மாட்டுத் தொழுவத்தில் வந்துபிறந்தார். மாம்ச மனிதர்களின் கண்களுக்கு அவரைக் கண்டு கொள்ளமுடியவில்லை. வான சாஸ்திரிகளோ பாலன் இயேசு ராஜாவைக் கண்டுபிடித்ததினால் மகிழ்ச்சியுடன் விழுந்து பணிந்து காணிக்கை சமர்ப்பித்தார்கள். கர்த்தத்துவ அவர் தோளின்மேல் இருந்ததே காரணம்.

உலகுக்காகவே பிறந்தார். இயேசு பிறந்தார் என்ற நற்செய்தியைக் கேட்டால் ''என் உள்ளம் பொங்குகிறதே.'' ஆம் இயேசு பிறந்தார். பூவுலகில் மானிடனாய்ப் பிறந்தார். உலக மக்களுக்கு சமாதானத்தையும் மீட்பையும், ரட்சிப்பையும் தர இயேசு பிறந்திருக்கிறார். ''இயேசு என்றால் ஜனங்களின் பாவங்களை நீக்கி ரட்சிப்பவர் என்று அர்த்தமாம். இம்மானுவேல் என்றால் தேவன் நம்மோடு இருக்கிறார் என்று அர்த்தம்.''

''மனிதனோடுகூட எப்பொழுதும் இருக்கிறவர். ஏசாயா தீர்க்கதரிசி மூலமாக உரைக்கப்பட்ட ரட்சகர், ஆலோசனைக் கர்த்தர் அதிசமானவர், வல்லமையுள்ள தேவன். நித்தியபிதா சமாதானப்பிரபுவுமாகிய கர்த்தர் நம்மோடு கூட இருக்கிறார்.

''மனித ரூபமெடுத்து மாநிலத்தில் பிறந்த இயேசு ஆதரிப்பாரற்று அல்லலுறும் யாவரோடும் கூட இருக்கிறார். இதுதான் இன்றைய உலகிற்கு நற்செய்தி. கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகாது, கதை

(9ம் பக்கம் பார்க்க)

எல்லோர்க்கும் எமது
நத்தார்—புத்தாண்டு வாழ்த்துக்கள்

நவநாகரீக
நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்
ஹரன்
ஜுவல்லர்ஸ்
போன: 444 தந்தி: அரத்தினம்ஸ்
50, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் இனிக்கும்
நத்தார் - புத்தாண்டு வாழ்த்துக்கள்

யாழ். நகரில் ஆடை அணிகளின் நாயகன்!
தரத்தில், பாவனையில் சிறந்த சகல ஜவுளிகளுக்கும் சிறந்த ஸ்தாபனங்கள்

லிங்கம் சில்க் ஹவுஸ்
இல: 18, நவீன சந்தை — யாழ்ப்பாணம்

சோதி. ரெக்ஸ்ரைல்ஸ்
இல: 14, நவீன சந்தை — யாழ்ப்பாணம்

அனைவருக்கும் எமது
நத்தார்—புதுவருட நல்வாழ்த்துக்கள்

மணமகளுக்குத் தேவையான சகல தங்க வைர நகைகளுக்கு விஜயம் செய்யுங்கள்

கே.கே.வி.யாழ்ப்பாணம் நகைமாளிகை
82/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
போன்: 362

சுத்தமான பவுணுக்கும் கண்ணைக் கவரும் நவீன வேலைப்பாடுகளுக்கும் யாழ்ப்பாணத்தில் நம்பிக்கைவாய்ந்த ஸ்தாபனம்.

ஓடர்கள் குறித்த தவணையில் சிறந்த முறையில் செய்துகொடுக்கப்படும்.

K. K. V. JAFFNA JEWEL HOUSE
82/4, KASTURIAR ROAD — JAFFNA.
Phone: 362

அனைவர்க்கும் எமது அன்புகலந்த

நத்தார் - புதுவருட வாழ்த்துக்கள்

இத்திருநாளில் உங்கள் இதயம் கவர்ந்த தங்க, வைர நகைகளைத் தெரிவுசெய்ய மறவாதீர்கள்

பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

போன்: 7199 தந்தி: 'வைரம்'

எமது
அன்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும்
எமது இதயங்கனிந்த

நத்தார் வாழ்த்துக்கள்
உரித்தாகுக!

றேடியோமனுயல்

23/4, ஸ்ரான்லி வீதி.
யாழ்ப்பாணம்.

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், அபிமானிகள்
அனைவருக்கும் எமது

நத்தார்-புத்தாண்டு வாழ்த்துக்கள்

நவீன வேலைப்பாடுள்ள
தங்க, வைர நகைகள்
விரும்பிய டிசைன்களில் உத்தரவாதத்துடன்
கிடைக்குமிடம்

அபிராமி ஜுவலர்ஸ்

ஓடர் நகைகள் குறித்த தவணையில்
செய்துகொடுக்கப்படும்

அபிராமி ஜுவலர்ஸ்

387, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

அனைவர்க்கும் எமது அன்புகலந்த
நத்தார் – புத்தாண்டு
வாழ்த்துக்கள்!

நீடித்த உழைப்பும் நிறைந்த பயனுமிக்க
புகழ் பெற்ற

றேடியோக்கள்

புதிய குறைந்த விலைகளில்
விற்கின்றோம் என்பதை
மறவாதீர்கள்

எஸ். சுலைமான்கண்டு
அன் பிறதர்

5, 7. ஸ்ரான்லி வீதி — யாழ்ப்பாணம்

# "நானேவழி; நானேசத்தியம்; நானே ஜீவன்"

வளரும் குழந்தை தன் சூழலைப் பார்க்கிறது. பார்க்கும் பொருட்கள் பலவித கேள்விகளைக் குழந்தையின் மனதில் எழுப்புகின்றன எது; என்ன; ஏன்; எப்படி என்ற பல கேள்விகளையும் குழந்தை கேட்கிறது. கேள்வி உள்ளம் வளர்ந்து கொண்டே போகிறது. மனிதனை பின்பும் அவன் கேள்விகளை விடுவதில்லை.

வாழ்க்கை என்றால் என்ன? அதில் நோக்கம் உண்டா? ஏதாவது இருந்ததுண்டா? எங்கள் கேள்விகள் மனுஷன் மனதிலே எழும்பும் கேள்விகள். அக்கேள்விகட்கு மனுஷன் என்ன பதில்களை அளிக்கிறானோ, அவற்றுக்குத் தக்கதாகவே மனுஷ வாழ்க்கையும அமைகிறது. வாழ்க்கையிலே கருத்தில்லை எனக் காண்பவனுக்கு. வாழ்க்கைவெறுமையான நீர்க்குமிழியாகி விடுகிறது. கருத்தைக் காணாததால் தொடர்ந்து வாழ்வதில் கருத்தில்லையென எண்ணித் தன் வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளி வைத்து விடுகிறான். வாழ்ந்தாலும் விரத்தியோடு, வெறுப்போடு வாழ்கின்றான். அவன் உயிரோடிருக்கிறானேயன்றி வாழ்வதில்லை. மறுபக்கத்தில், வாழ்க்கையில் நோக்கத்தையும் கருத்தையும் காண்பவன், அந்த நோக்கம் நிறைவேற கருத்துள்ள வாழ்க்கையை வாழ்கிறான். வாழ்க்கையில் கருத்தைக் கண்டு, அது நிறைவேற வாழ்வதே மனித வாழ்க்கையின் இலக்காகும். அதுவே அவனது பிறவியின் நோக்கமுமாகும்.

இன்றைய மனிதன் இப்பெரு நோக்கை இழந்துவிட்டான். கருத்தற்ற வாழ்க்கை வாழ்வதால் தன் கண்ணியத்தை இழந்துவிட்டான். நோக்கமற்ற இலக்கற்ற, இலட்சியமற்ற பார வாழ்க்கை வாழ்வதால் தனக்கும் மற்றோருக்கும் பாரமாகிவிட்டான்.

மறுபடியும் தன் வாழ்க்கையின் இரகசியத்தை, பரிசுத்த நோக்கத்தைக் கண்டு அதற்குத் தக வாழ்வதே அவனது இன்றைய தேவை. வாழ்வு எது எனக் கேட்டு அலையும் மனிதனுக்கு நானேவாழ்க்கை; நானே ஜீவன் எனக் கூறும் தொனி மறுபடியும் இந்நாளில் கேட்கிறது. அதுவே ஆண்டவர் யேசு பெருமானின் அருமைத் தொனி. அத்தொனியைக் கேட்டோர், அவரிடம் வந்தோர். அவரால் ஆளப்பெற்றோர் வாழ்க்கையின் நிறைவையே அவரிடம் கண்டனர், கண்டுபெற்றனர், பெற்று வாழ்ந்தனர். [யோவான் 10;10] இந்த நாளிலும் அதே தொனி நம்மை அழைக்கிறது. அவரண்டை சென்று அவர் தரும் நிறை வாழ்வைப் பெற்று உய்வோமாக.

வாழ்க்கையைக் காண விரும்புவோரும் அதற்கு வேண்டிய வழியைக் காணாது தவிக்கின்றனர். வாழ்க்கையில் வழிதவறினோர் பலர்; வழியறியாது அலைவோர் பலர்; வழிகாட்டுவாரின்றி வீணே வாடுபவர் பலர். [அவர் வழி இவர் வழி என்று பல வழிகளிலே போய் பாழாகிப் போனோர் பலர் மெய் வழி தேடி வாடும் மனிதனுக்கு 'நானே வழி' என்பது நாதன் இயேசுவின் நல்ல வாக்கு. 'என்னைக்கண்டவன் கடவுளைக் கண்டான்' என்பது அவரது ஒப்பற்ற கூற்று. அவரை வழியாய்க் கண்டோரும் வாழ்ந்தனர்; வாழ்கின்றனர்; மற்றோரும் வாழ வழி வகுக்கின்றனர் நானே வழி என உரிமையோடு கூறி அழைக்கும் ஆண்டவரை வாழ்க்கைக்கு வழியாக ஏற்று வாழ முயல்வோம்.

வாழ்க்கையிலே கைப்பிடிக்க வேண்டிய சத்தியம், நெறி. உண்மை என்பது எது? மனுஷனை வாழ வைப்பதும் வாழ ஏவுவதுமான 'சத்தியம்' இன்று மறைந்துவிட்டது. தவறான காரியங்களைச் சத்தியம் எனக்கொள்ளும் மனிதன் தவறாகப் போவதுமன்றி மற்றையோரையும் தவறாக நடத்திச் செல்கிறான். ஓர் உன்னத சத்தியத்தைக் கடைப்பிடித்து வாழ வேண்டியவன் மனிதன். அதுவே சத்தியாக்கிரகம், சத்தியாக்கிரகமென்பது வழியை மறித்து உட்கார்ந்து இடைஞ்சல் கொடுப்பதல்ல. அது வாழ்க்கை முழுவதிலும் கொண்டு நடத்தும் இலட்சிய வாழ்க்கை சத்தியம் இன்றேல் வழி இல்லை; வழியின்றேல் வாழ்க்கையில்லை. கிறிஸ்தவ விசுவாசத்தின்படி சத்தியம் என்பது ஒரு கொள்கையல்ல. அது ஒரு ஆள். அவரே கிறிஸ்து. ஆகையினாலே கிறிஸ்துபெருமான் 'நானே சத்தியம்' எனக் கூறினார்.

வாழ்க்கை, வழி, சத்தியம் இவை மூன்றுமே மனுஷன் தேடும் மேலான காரியங்கள். ஆனால் இவை மூன்றும் மூன்று வெவ்வேறு கொள்கைகள் அல்ல. இவையாவும் ஒரு ஆளே. அதனாலேயே 'நானே வழி நானே சத்தியம்; நானே ஜீவன்' என்று ஆண்டவர் இயேசு தம்மை அறிமுகப்படுத்தி அனைவரையும் தம்மிடம் அழைத்தார்; இன்றும் அழைக்கிறார்.

வழி அறியாது சத்தியம் தெரியாது வாழ்க்கையின் நோக்கம் புரியாது வீணே வாடும் மனிதனுக்கு வரும் கிறிஸ்மஸ் செய்தி இதுவே. இச்செய்தியே இன்றைய மனிதனுக்கு வேண்டிய ஒரே நற்செய்தியாகும்!

இந்நாளின் ஆசீர்வாதம் அனைவரோடும் தங்குவதாக.



வண. எம். ஏ. இரத்தினராஜா

நத்தார்-புதுவருட வாழ்த்துக்கள்

அமுதா நகைமாளிகை

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எங்கள் நத்தார்-புதுவருட வாழ்த்துக்களை
அன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம்.
உங்கள் ஓடர் நகைகளை குறித்த தவணையில்
சிறந்த முறையில் குறைந்த செலவில்
செய்விப்பதற்கு சிறந்த ஸ்தாபனம்.

அமுதா நகைமாளிகை

உரிமையாளர்:
க. கந்தையாபிள்ளை
தங்க, வைர, நகை வியாபாரிகள்
363, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

அன்பர்கள், ஆதரவாளர்கள், விற்பனையாளர்களுக்கு

நத்தார் — புத்தாண்டு வாழ்த்துக்கள்!

பொன்விழா பொலிவுகண்ட யாழ்ப்பாணம் மில்க்வைற் ஸ்தாபனத்தார் பிறக்கின்ற புத்தாண்டு '1978' பொலிபெற வாழ்த்துரைக்கின்றார்கள்!

"மில்க்வைற்" தயாரிப்புக்களின் மேலுறைகளை சேகரித்து அனுப்பி அவர்களின் அன்பளிப்புச் சாதனங்களான
∴ அழகிய துவாய் ∴ பொலித்தீன் பாக் ∴ சுவாமிப்படங்கள்
∴ காந்திக் கலண்டர் ∴ மில்க்வைற் செய்தி
∴ மில்க்வைற்வெளியீட்டுப் பிரசுரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.




மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்

த. பெ. எண் 77 [தொலைபேசி: 7233] யாழ்ப்பாணம்.

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், அபிமானிகளுக்கு எமது
நத்தார்-புத்தாண்டு வாழ்த்துக்கள்

தரமான இலங்கைஓடுகள் விற்பனையாளர்
மு. தா. பொன்னம்பலம்
36, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 7493

உயர்தரமான தளபாட விநியோகஸ்தர்கள்
வூட்சன்ஸ்
38, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 7700

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது
நத்தார் - புதுவருட வாழ்த்துக்கள்
அழகிய பவுண் நகைகள்
தங்கப்பவுண் வைரங்கள்
கே. என். எம்.
மீரூன் சாஹிப்
தங்கப்பவுண் நகை மாளிகை
நகை வியாபாரம்
கன்னதிட்டி — யாழ்ப்பாணம்
போன்: 585

எல்லோர்க்கும் எமது
நத்தார் - புத்தாண்டு வாழ்த்துக்கள்
ஏ.கே.எஸ். அன்சன்ஸ்
நகை மாளிகை
68, கன்னதிட்டி — யாழ்ப்பாணம்.
போன்: 519

நிதான விலை! நம்பிக்கை!
பலவருடகாலமாக எமக்கு ஆதரவு தந்து ஊக்குவித்த அன்பர்களுக்கும்
வாடிக்கையாளர்களுக்கும் எமது மனப்பூர்வமான
நத்தார் - புதுவருட வாழ்த்துக்கள்
உரித்தாகுக
கமலா ஸ்ரோர்ஸ்
123, பாங்ஷால் வீதி — யாழ்ப்பாணம்.
போன்: 7148
கிளை:
கவுரி போறேஜ் ஸ்ரோர்ஸ்
5, நியூ மார்க்கட் — ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.

## கலாயோகியின் வாழ்க்கையும் பணிகளும்—10

# வித்தகர் புகழுடம்பு எய்துதல்

(சென்றவாரத் தொடர்ச்சி)

இவற்றுக்கு மேலாக இலங்கையில் நடைபெற்ற விழாவை விமர்சித்து அனுப்பப்பட்ட தந்திச் செய்தியும் இவ்விருந்தின் போது வாசிக்கப்பட்டது. இவற்றையெல்லாம் பார்த்துவிட்டு அவர் உணர்ச்சி வசப்பட்டார். அவரால் நின்றுகொண்டு பேச முடியாமல் தமது நன்றியுரையை இருந்துகொண்டே நிகழ்த்தினூர். அதன் சாரம் பின்வருமாறு:-

நீங்கள் எல்லோரும் இங்கு கூடியிருப்பதினுலும், அன்பளிப்புக்கள் வழங்கியதினுலும், படிக்கப்பட்ட வாழ்த்துச் செய்திகளினுலும், பாரத ஐயர் தயாரித்தனுப்பிய விழா கூட நிர்வாகிகளுக்கும் தர்மகர்த்தாக்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

எனது கருத்துக்களை ஏற்காவிட்டாலும் அவற்றைக் கூறுவதற்கு இடம் தந்த அமெரிக்க கீழ்நாட்டுக் கலாச்சாரம் சம்தமான சங்கத்தின் (American Oriental Society) சஞ்சிகையின் ஆசிரியர்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன் அதில் சிறப்பென்னவெனில் எனது ஆராய்ச்சி முடிபுகள் இக்கால சமுதாயக்கொள்கைகளுக்கு மாருகவிருந்தபோதிலும் அவர்கள் அதைப் பொருட்படுத்தவில்லை. ரஸ்கின் கூறியிருப்பது போல் கலைசம்பந்தப்படாத தொழிலெல்லாம்

**ச. அம்பிகைபாகன்**

மலரினுலும் நான் கௌரவிக்கப்பட்டதோடு, மிகவும் உணர்ச்சி வசப்பட்டுவிட்டேன். நானிங்கு காணுத நால்வர் பற்றி-உயிருடன் இருந்திருந்தால் அவர்கள் இங்கு கட்டாயம் வந்திருப்பார்கள் - குறிப்பிட விரும்புகிறேன். அவர்கள் டாக்டர் டென்மன் டபிள்யூ ரோஸ் (Dr. Denman U Ross) டாக்டர், ஜோன் லொட்ச்) Dr. John Lodge) டாக்டர் லூசியன் ஷேர்மன் (Dr. Lucian Schirman) பேராசிரியர் ஜேமஸ் வூட்ஸ் (Prof. James Woods) என்பவர்களாவர். இவர்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன். டாக்டர் டென்மன் ரோஸ் என்பவரே பொஸ்ரன் கலைக்கூடத்தில் இந்தியப் பகுதியை ஆரம்பிப்பதற்குத் தூண்டுகோலாகவிருந்தவர். டாக்டர் லொட்ச் அதிகம் எழுதாவிட்டாலும் வாஷிங்டனிலும் இங்கும் ஆற்றிய சேவையினுலும், அவர் கொண்டிருந்த குறிக்கோளினுலும்-கற்காலம் தொடங்கி இக்காலம் வரைக்குமுள்ள அரிய பொருட்கள் கலைக்கூடத்தில் இடம்பெற வேண்டுமென்ற குறிக்கோள்-அவர் எப்பொழுதும் ஞாபகத்தில் வைக்கப்படவேண்டியவர். டாக்டர் ஷேர்மன் மறுபிறப்புப் பற்றி நான் எழுதவேண்டுமென்று அவர் இறக்குமுன் எனக்கிட்ட பணியை நிறைவேற்ற எண்ணியுள்ளேன். ஆசிரியர்களுள் தலைசிறந்தவரான பேராசிரியர் வூட்சின் இடத்தை நிரப்ப முடியாது.

என் வாழ் நாளில் அரைவாசியை பொஸ்ரனில் கழித்துள்ளேன், இங்கிருந்து கலை, சரித்திரம், சமயம் சம்பந்தமான ஆராய்ச்சிகளை நான் விரும்பியபடி செய்வதற்கு இடம் தந்த பொஸ்ரன் கலைக் மிருகத்தன்மையுடையவை (Industry without Art is Brutality) என்று என்னுல் சொல்லாமலிருக்க முடியாது. மனிதன் தான் படைக்கும் ஒவ்வொரு பொருளுக்கும் அதன் தரத்திற்கும் பொறுப்புடையவனுகவிருக்காவிட்டால் அவன் சந்தோஷத்துடன் வாழமுடியாது. இப்பொழுதிருக்கும் நிலையில் தொழிலாளி, முதலாளிக்கும் யந்திரத்திற்கும் அடிமையாயிருப்பதால் அவன் சந்தோஷமாக வாழமுடியாது. பொதுவுடைமை நாடுகளிலும் தொழிலாளியின் தனிப்பட்ட ஆற்றலுக்கு இடம் கிடையாது. கலைக்கூடங்களில் காணப்படும் பொருள்களைப் பார்க்கும் பொழுது, அவை ஒரு காலத்தில் மனிதனுல் உபயோகிக்கப்பட்டவையென்பதும் அவை சாதாரணமாய் கடைகளில் கிடைக்கப்பெற்றவையென்பதும் நமக்குத்தெரிகிறது. மனிதன் எப்பொழுது தனது சுவதர்மத்தின்படி வாழ்கிறனோ அப்பொழுது தான் அவன் சுதந்திர புருஷனுக வாழமுடியும்.

மேலும் நான் ஒரு புதுச் சித்தாந்தத்தையோ ஒருபுதுஇயக்கத்தையோ உண்டாக்க முயலவில்லை என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். சொல்ல வேண்டியதெல்லாம் சொல்லியாய்விட்டதென்பதை நான் நன்கறிவேன். எல்லாவற்றையும் நடத்திவைக்கும் பரம்பொருள் காட்டும் வழிப்படி நடப்பதே நமது கடமை. எல்லா வித்தியாசங்களுக்கும் அடிப்படையில் ஒரு ஒற்றுமையிருக்கிறது. சமயங்களெல்லாம் ஒரு பாஷையின் பிரதேச வழக்குகள் போன்றவையாகும்.

இன்று எனது எழுபதாவது பிறந்த தினமாயிருப்பதால், பிரியாவிடை கூறுவதற்குத் தகுந்த சந்தர்ப்பமாகும். எங்கள் திட்டமிதுவாகும். அடுத்த ஆண்டு நானும் எனது மனைவியும் வேலையிலிருந்து ஓய்வெடுத்துக்கொண்டு இந்தியாவுக்குப் போகத்தீர்மானித்துள்ளோம். இது நமது சொந்த வீட்டுக்குப் போவது போலாகும். இப்பொழுது மார்க்கொபாலிஸ் (Marco Pallis) என்பவரோடு திபேத்தில் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு எனது மனைவி கற்றுக்கொண்ட ஆசிரியரிடம் கங்கேரி குருகுலத்தில் சமஸ்கிருதமும் இந்தியும் கற்றுக்கொண்டிருக்கும் எங்கள் மகன் ராமாவை மீளவும் சந்திப்போம். சுதந்திர நாடாகவிருக்கும் இந்தியாவில் எமது எஞ்சிய வாழ் நாளை கழிப்போம்.

நான் கலைகளின் சரித்திரத்தைப் படித்ததன் மூலம் தத்துவ ஆராய்ச்சிக்கு இட்டுச் செல்லப்பட்டேன். இதனுல் என் வாழ்க்கையில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. இனி வேலை செய்வதைக் குறைத்துக் கொண்டு தியானத்தில் ஈடுபட விரும்புகிறேன். இதுகாறும் தர்க்கரீதியாக அறிந்து கொண்டவற்றை அநுபூதி மூலம் உணர விரும்புகிறேன். நான் உயிர்க்குயிராம் பரம்பொருளை அறிய நாடுகிறேன்.

(9-ம் பக்கம் பார்க்க)

வாடிக்கையாளர்கள், அன்பர்கள்
ஆதரவாளர்களுக்கு எமது இனிய
நத்தார்-புத்தாண்டு
வாழ்த்துக்கள்!
வனிதையர் விரும்பும் வனப்பான
● பிடைவத்தினிசுகள் ● கூறைச்சேலைகள்
ஆடவர் விரும்பும் பட்டு வேட்டிகள்.
அழகிய சேட்டிங், சூட்டிங்
அனைத்துக்கும் யாழ்.நகரின் ராசியான இடம்
மணியம்ஸ்
16, நவீன சந்தை — யாழ்ப்பாணம்
போன்: 7645

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது
நத்தார் — புத்தாண்டு வாழ்த்துக்கள்!
1978ம் ஆண்டுக்கான இலவசப்பொருட்களை, மேலுறைகளை சேகரித்துப் பெற்றுக்கொள்ளலாம்
ஃ சிக்கனச் சலவைக்கு 'லாலா நீலசோப்' ஃ அழுக்கை அகற்றி பளிச்சிடும் வெண்மைக்கு 'சன்சயின் சோப்'
லாலா தயாரிப்புகள் அனைத்தும் தரத்தில் சிறந்தவை.
★ தரம்நாடுவோர் என்றும் கேட்பது லாலா ★
SUNSHINE SOAP
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி.

சினிமா ரசிகர்கள் மற்றும் அனைவருக்கும் எமது
நத்தார் - புதுவருட வாழ்த்துக்கள்
மனோஹரா (யாழ் நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி- ஜெமினி - லக்ஷ்மி - நிர்மலா
உனக்காக நான்
(ஈஸ்ட்மன் கலர்)

சினிமா ரசிகர்கள் மற்றும் அனைவருக்கும் எமது
நத்தார் - புது வருட வாழ்த்துக்கள்
RIO | 26 - 28 | Daily 4 Shows
VIOLENT ONES
By Popular Demand Back To RIO From 29-31
EYE WITNESS

சினிமா ரசிகர்கள் மற்றும் அனைவருக்கும் எமது
நத்தார்-புத்தாண்டு வாழ்த்துக்கள்
வின்ஸர் யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் ரஜனிகாந்த்
எம்.எஸ்.விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஒய். விஜயா
மூன்று முடிச்சு
திரை கதை வசனம், டைரக்ஷன்; கே. பாலசந்தர்

சினிமா ரசிகர்கள் மற்றும் அனைவருக்கும் எமது
நத்தார் - புதுவருட வாழ்த்துக்கள்
ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள்
யாழ்ப்பாணம்) தென்னகத்தில் 100
நாட்களுக்குமேல் ஓடிய வெற்றிச் சித்திரம்
★ முத்துராமன் ★ ஜெயசித்திரா
★ சுந்தரராஜன் ★ ஸ்ரீகாந்த்
வி. கே. ராமசாமி, தேங்காய் சீனிவாசன்
குமாரி பத்மினி நடித்த
அவள் ஒரு தொடர்கதை, பெண் தெய்வம் வரிசையில் மற்றுமோர் வெற்றிப் படைப்பு.
இன்ஸ்பெக்டர் மனைவி
திரைக்கதை - வசனம் - டைரக்ஷன்
A. C. திருலோகசந்தர் M. A.
இசை: இன்னிசை வேந்தர்கள் சங்கர், கணேஷ்

## வித்தகர்....

[8ம் பக்கத் தொடர்ச்சி]

மேலேகூறியவற்றை விவரித்தவர் பின்வருமாறுகூறிமுடிக்கிறார்; இவர் சொற்களின் நாதம் ஒலித்துக்கொண்டிருக்கும் பொழுது. விருந்தில் பங்குபற்றுவதற்கு நண்பர்களாக வந்தவர்கள் சீடர்களாகி விட்டார்கள். பிறந்ததின விழாவில் பங்குபற்றவந்தவர்கள். கடைசி இராப்போசனத்தில் (Last Supper) பங்குபற்றினவரானார்கள். இராப்போசன விருந்தில் பேசப்படும்பேச்சைக் கேட்க வந்தவர்கள் இவரின் கடைசி உபதேசங்களைக் கேட்டனர்.

[சிலுவையில் அறையப்படுமுன் யேசுவும் சீடர்களும் கடைசி இராப்போசனத்தில் பங்கு பற்றினர்.] கலாயோகியும் விருந்து நடந்து சில தினங்களில் மறைந்துவிட்டபடியால் அவ்விருந்தும் கடைசி இராப்போசனமாயிற்று.

இவர் பேச்சு முடிந்ததும் கூடியிருந்தவர்கள் ஒருவராக இருவராக வீடு திரும்பினர். கலாயோகி நண்பர்களின் உதவியுடன் காரில் ஏறி. மனைவி காரைச்செலுத்த வீடு போய்ச் சேர்ந்தார். [வளரும்]

## சிறுகதை

பாலகன் உருக்கொண்டு
கன்னியுதரம நின்று
பாரினில் பெத்தலகேம்
நகரினில் பிறந்தார்
பரிவுடன் அவர் பதம்,
தொழுவோம் வாரீர்'
மரியம்மா பிள்ளைகளுக்கான உடுப்பை மறந்து தேவதுதிப் பாடலுள் ஆழ்கின்றாள்.

ஜசிந்தாவும் ராசனும் மழலைப் பிசிறலில் அவளைத் தொடர்கின்றனர்.

அன்று பிறந்த யேசு பாலனுக்கு புதுச்சட்டை இருக்கவில்லையே. மாட்டுக்கொட்டிலிலே கந்தல்களும் வைக்கோலும் தானே அவரின் போர்வையாகவும் படுக்கையாகவும் இருந்தது? அவள் மனம் சலனமற்று அமைதியடைகின்றது.

(யாவும் கற்பனை)

## இறக்கு...

[6-ம் பக்கத்தொடர்ச்சி]

நிஷ்டை கை கூடியது. இவருக்கும் இதேபோல் தன் உடலின் காட்சி தெரிந்தது. ஆனால் இவருக்கு உடல் வேதனையோ ரத்த வியர்வையோ ஏற்படவில்லை. இவரது ஆவிஉடல் காற்றில் தக்கைபோல் நின்றது. அந்த நேரத்தில் மனைவி, மகன்களின் நினைவு இவருக்கும் ஏற்பட்டது. அஸ்ஸாம் மாநிலத்தில் இருந்து ஆயிரக்கணக்கான மைல்கள் தள்ளியிருக்கும் விழுப்புரம் நகரத்திற்கு சில நொடிகளில் வந்தது இவரது ஆவிஉடல். அச்சமயம் உறங்கச் சென்ற இவரது மனைவி திடீரென்று திருதிருவென விழித்தார். நம் கணவனின் உருவைப் போல் தெரிந்ததே! அவர் எப்போது வந்தார்? எப்படி வந்தார்? என்றெல்லாம் சிந்திக்க ஆரம்பித்தார். (சிலருக்கு இயற்கையிலே ஆவிகளைப் பார்க்கும் சக்தி உண்டு.) மீண்டும் அவ்வுருவம் நன்கு புலப்பட ஆரம்பித்ததும் பயத்தில் அலறிவிட்டார். எனவே முனுசாமி அவர்களால் அங்கு இருக்க முடியவில்லை. ராணுவ முகாம் திரும்பி தியானம் கலைந்ததும் நடந்த விபரத்தைத் தெரிவித்து வீட்டிற்கு கடிதம் எழுதினார்.

சினிமா ரசிகர்கள் மற்றும் அனைவருக்கும் எமது
நத்தார்-புத்தாண்டு வாழ்த்துக்கள்
Regal (Jaffna)
Daily at 4-45 7-00 & 9-30 P. M. only
BARAKA FOR SECRET SERVICE
(Spy - Color - Scope)

சினிமா ரசிகர்கள் மற்றும் அனைவருக்கும் எமது
நத்தார் - புத்தாண்டு வாழ்த்துக்கள்
சாந்தி (யாழ். நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெமினி - சாவித்திரி (இருவேடங்களில்)
ரங்கராவ், M R ராதா
காத்திருந்த கண்கள்
(புதிய பிரதி)

சினிமா ரசிகர்கள் மற்றும் அனைவருக்கும் எமது
நத்தார்—புதுவருட வாழ்த்துக்கள்
ராணி தினசரி 10-30, 2.30, 6 00, 9.30.
எம். ஜி. ஆர்.-விஜயா, நாகேஷ்
[யாழ்ப்பாணம்] நடித்த
வி வ சா யி
(புதிய பிரதி)

சினிமா ரசிகர்கள், மற்றும் அனைவருக்கும் எமது
நத்தார் - புதுவருட வாழ்த்துக்கள்
வெலிங்டன் [யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-ஜெய்கணேஷ்
மூத்தான முத்தல்லவோ
லிடோ எம். ஜி. ஆர். — லதா நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
(யாழ். நகர்) போன்: 7693
நீதிக்கு தலைவணங்கு

சினிமா ரசிகர்கள் மற்றும் அனைவருக்கும் எமது
நத்தார்-புதுவருட வாழ்த்துக்கள்
வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி, 2-30, 6-30, 9-30
சிவாஜி — ஜெமினி
பந்தபாசம்

சினிமா ரசிகர்கள் மற்றும் அனைவருக்கும் எமது
நத்தார்-புதுவருட வாழ்த்துக்கள்
புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30,
ரவிச்சந்திரன்-ராஜன்
டில்லிமாப்பிள்ளை

சினிமா ரசிகர்கள் மற்றும் அனைவருக்கும் எமது
நத்தார்-புதுவருட வாழ்த்துக்கள்
நாகமஸ்
(சுன்னாகம்)
தினசரி பி.ப. 6-45, 10-00
சனி, ஞாயிறு பி. ப. 2-30
எம்.ஜி.ஆர்-லதா
உழைக்கும் கரங்கள்

சினிமா ரசிகர்கள் மற்றும் அனைவருக்கும் எமது
நத்தார்-புதுவருட வாழ்த்துக்கள்

யாழ். மாவட்டத்தில் ராஜா திரையரங்கில் மட்டும்
26-12-77 முதல் எல்லாக் காட்சிகளுக்கும் தமிழ்த் தலைவர் அமரர் தந்தை செல்வாவின் இறுதிக் காட்சி காண்பிக்கப்படும்.
எஸ். ரி. ஆர். பிலிம்ஸ் வெளியீடு
கொட்டகை நிறைந்த காட்சிகளுடன் 100-வது நாளை நோக்கி விறுநடைபோடும் ஈடு இணையற்ற திரைக்காவியம்
P. V. C. தயாரிப்பு
ஜெமினி
கே. ஆர். விஜயா
விஜயகுமாரி
★ தசாவதாரம் ★
சீர்காழி கோவிந்தராஜன்
ஸ்ரீதேவி
ரவிகுமார்
(கலர்)
காட்சி நேரங்கள்
காலை 10-15
பி. ப. 2-00
மாலை 6-00
இரவு 9-45
திரைக்கதை, வசனம், டைரக்ஷன் கே. எஸ். கோபாலகிருஷ்ணன்
இன்று போயா இனத்தையொட்டி காட்சிகள் இல்லை

### வரவு செலவுத் திட்டததை

# பெயரளவிலேயே கூட்டணி எதிர்த்தது!

## சண்முகதாசன் கூறுகிறார்

[யாழ்ப்பாணம்]

"தமிழர் விடுதலைக் கூட்டணியினர் வரவு-செலவுத் திட்டத்தைப் பெயரளவிலேயே எதிர்த்துள்ளனர் வரவு-செலவுத் திட்ட இரண்டாவது வாசிப்பின்போது எதிர்ப்பு எதுவுமின்றி நிறைவேற்றக் கூட்டணியினர் வழிசெய்துள்ளனர். அதுமட்டுமல்ல, தேர்தல் காலத்தில் கிராமத்திற்குக் கிராமம் கூட்டம் வைத்த கூட்டணியினர் வரவு செலவுத் திட்டத்தை எதிர்த்து வடபகுதியில் ஒரு கூட்டமாவது வைக்கவில்லை."

யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றிரவு நடைபெற்ற கூட்டத்தில் சீன சார்புக் கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளர் திரு. என். சண்முகதாசன் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

திரு. என். கே. சுப்பிரமணியம் தலைமையில் வரவு-செலவுத் திட்டத்தை எதிர்த்து நடந்த இக்கூட்டத்தில் திரு. சண்முகதாசன் மேலும் கூறியதாவது: "மலைநாட்டில் கணவனும் மனைவியும் தோட்டத்தில் வேலை செய்கிறார்கள். இதனால் அவர்கள் குடும்ப வருமானம் 300 ரூபாவிற்கு மேலாகிறது இதன்படி மலைநாட்டுத் தமிழர்கள் பெருமளவில் கூப்பனை இழக்கப்போகிறார்கள்.

"மலைநாட்டுத் தமிழரின் கூப்பனைப் பறிக்கும் இந்த அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் திரு. எஸ். தொண்டமானை கூட்டணியினர் இன்னும் ஏன் தலைவராக வைத்திருக்கிறார்களோ தெரியவில்லை.

"கடந்த அரசின் காலத்தில் எம். பி க்களின் சம்பளத்தைக் கூட்டும் தீர்மானத்திற்கு அரசாங்கக் கட்சி, எதிர்க்கட்சிகள் எல்லாம் சேர்ந்து ஆதரவளித்தார்கள். யு. என். பி. அரசாங்கம் மறைமுகமாக எம். பி.க்களுக்கு மீண்டும் சம்பளத்தைக் கூட்டியுள்ளது. எம். பி.க்கள் கலந்துகொள்ளும் ஒவ்வொரு கூட்டத்திற்கும 100 ரூபா மேலதிகமாக வழங்கப்படும். இம்மாதம் 20 பேரவைக் கூட்டங்கள் நடந்துள்ளன. அதனால் ஒவ்வொரு எம் பி யும் வழக்கமான சம்பளத்தையும் சேர்த்து இம்மாதம் 3000 ரூபா சம்பளம் பெறுகிறார்கள் அதேநேரம் மக்களுக்கு 3 வார அரிசியையும் ஒரே முறையில் கொடுத்து கூப்பனைப் பறிக்க இந்த எம். பி க்கள் ஆதரவளித்துள்ளார்கள். (க)

## இதற்காகவே

[6ம் பக்கத் தொடர்ச்சி]

யெல்லாம் சுவையான கதை காது. பயனுள்ள ஏடாகாது.

"மனிதனை உன் பாவம் போக்க, உன்னை விடுதலையாக்க, உனக்காக பரலோக மேன்மைகளை வெறுத்து தாழ்மையின் ரூபமாய் மானிடனாக இயேசு பிறந்திருக்கிறார் இந்த இயேசுவை உன் உள்ளத்தில் சொந்தமாய் ஏற்று சமாதானம் பெற்று சந்தோஷமாய் வாழ ஆயத்தம் செய். தினமும் நீ இயேசுவைப்பற்றிச் சிந்தி. அவரின் சரித்திரங்கள் நிறைந்த புஸ்தகங்களை இடைவிடாது படி. தினமும் அவரைத் துதி. இயேசு கைதூக்குவார்."

## தேடுகிறவர்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

காது; அவர்களுடைய குறிக்கோள்கள் தமக்குப் பிடிக்காவிட்டால் இவர்களை எவருமே சபிப்பதில்லை. ஏனெனில் அவர்களின் செல்வாக்கு நின்றுவிட்டது. அவர்கள் மறைந்துவிட்டனர். ஆனால் கிறிஸ்து நாதரோ அப்படியல்ல அவர் இன்றைக்கும் நேசிக்கப்படுகிறார். மண்ணில் மக்கள் உள்ளவரை மறுக்கப்படும் குறியாகிய இயேசுநாதரைச் சுற்றி இந்த சர்ச்சை தொடர்ந்து நிகழ்ந்து கொண்டேதான் இருக்கும். ஏனென்றால் உலக சரித்திரத்துக்கு விளங்காத புதிராகவே கிறிஸ்து இருப்பார். பணிவுடனும், அன்புடனும் அவரைத் தேடுகிறவர்களுக்கு மட்டும் அவர் ஒளியாகவும் இனிய நண்பராகவும் இருப்பார்.

## இன்று பன்றிக்கோட்டு ஆலயத்தில் பேராசிரியர்

[யாழ்ப்பாணம்]

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைப் பேராசிரியர் பண்டித வித்துவான் கு. சுந்தரமூர்த்தி எம். ஏ. 25ந் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30 மணியளவில் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, பன்றிக்கோட்டுப் பிள்ளையார் ஆலய மண்டபத்தில் 'மூவர் தமிழ்' தலைப்பில் பேருரை நிகழ்த்துவார். ஆலய தர்மகர்த்தாச் சபைத் தலைவர் த. சோமசுந்தரம் தலைமைதாங்குவார். 26ந் திகதி தமிழகம் திரும்ப இருக்கும் பேராசிரியர் திரு. சுந்தரமூர்த்தி பன்றிக்கோட்டுப் பிள்ளையார்கோவில் மண்டபத்தில் நிகழ்த்தும் பேருரை அவரது முதலாவது ஈழ வருகையின் நிறைவு நிகழ்ச்சியாகவும் அமையும்.

## நிவாரணம் பெற்றனர்

[அரியாலை]

கடந்த மாதம் ஏற்பட்ட பெருவெள்ளத்தினால் வீடிழந்தவர்களுக்குக் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் சமூக சேவைப்பகுதியினரால் நிவாரண நிதி வழங்கப்பட்டது பெருந்தொகையானோர் நிவாரண நிதியைப் பெற்றனர்.

## பருத்தித்துறை—

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பர் திரு. ரன்முத்துகலவும் அங்கு பிரசன்னமானார்.

கொலையுண்டவர் கான்ஸ்டபிள் என்றபடியால் பொது மக்களுக்கும் பொலிசாருக்குமிடையில் அசம்பாவிதம் ஏற்பட்டுவிடாதபடி பொலிஸ் உயர் அதிகாரிகள் மிகவும் கவனமாக நடவடிக்கைகளை எடுத்தனர்.

தேடுதலில் ஈடுபட்ட பொலிசாரை மேலதிகாரிகள் மிகக் கவனமாகக் கண்காணித்தனர். அதேசமயம் பொதுமக்களும் பொலிசாருக்கு மிகவும் சிறப்பாக ஒத்துழைப்பு வழங்கினர்.

கடற்கரையில் புதைக்கப்பட்டிருந்த கான்ஸ்டபிளின் சைக்கிளைப் பொதுமக்களே தேடி தோண்டி எடுத்துக் கொடுத்தனர். அவர்களில் சிலர் கடலில் குதித்து கான்ஸ்டபிளின் சடலத்தைத் தேடுவதிலும் ஈடுபட்டனர். கடற்படை அதிகாரி ஜயரட்னவும், பொலிஸ் அதிபரும் சுளியோடி சடலத்தைத் தேடினர். கடற்படை வீரர்களும் இம்முயற்சியில் ஈடுபட்டனர். ஆனால் சடலம் கிடைக்கவில்லை. இன்று மீண்டும் கடற்படை ஹெலிகொப்டர்கள் மூலம் சடலத்தைத் தேட பொலிஸ் அதிபர் ஏற்பாடு செய்துள்ளார். கொலைசெய்யப்பட்ட கான்ஸ்டபிள் கடலில் வெகுதூரம் வள்ளத்தில் கொண்டுசெல்லப்பட்டுக் கடலில் வீசப்பட்டிருக்கலாம் என்று பொலிசார் கருதுகின்றனர்.

கொலையாளிகள் பற்றி முழுத் தகவல்களும் பொதுமக்களிடமிருந்து பொலிசாருக்குக் கிடைத்துள்ளனவாம். சம்பந்தப்பட்ட மூவரும் தலைமறைவாகியுள்ள போதிலும் அவர்கள் பற்றிய விபரம் தெரியுமாகையால் விரைவில் பொலிசாரால் கைதுசெய்யப்படுவார்கள் என்று தெரிகிறது. இவர்களில் ஒருவர் குற்றச்செயல் கோஷ்டி ஒன்றுடன் தொடர்புடையவரென்றும கருதப்படுகிறது.

## ஈ. வே. ரா. நினைவு நாள

சென்னை, டிச. 24

பெரியார் ஈ. வே. ரா. நினைவுநாள் நேற்று சனிக்கிழமை இங்கு சிறப்பாக நடைபெற்றது.

# நாவலர் 100வது குருபூஜை சிறப்பாக கொண்டாடமுடிவு

[யாழ்ப்பாணம்]

தமிழுக்கும், சைவத்துக்கும் தொண்டாற்றிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்பெருமானின் நூறாவது குருபூசைத் தின விழாவை 1979ல் சிறப்பாகக் கொண்டாடவேண்டுமெனவும் மற்றும் மன்றங்களும் அவ்விழாவைச் சிறந்த முறையில் நடத்தக் கேட்டுக்கொள்வதெனவும் நாவலர் தர்மப் பாதுகாப்புச் சபையின் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேற்படி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட இன்னுமொரு தீர்மானத்தில் பின்வருமாறு தெரிவிக்கப்படுகின்றது:

அண்மையில் சிதம்பரம் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நடைபெற்ற நாவலர் குருபூசைத்தின விழாவிற்குத் தலைமைவகித்த பேராசிரியர் திரு கு. சுந்தரமூர்த்தி பேசுகையில், நாவலர் பெருமான் இந்தியாவுக்கு வரும்பொழுது ஒரு பைசாக் கூடக் கொண்டுவராது வருகைதந்தாரென்றும், நாவலர் ஒழுக்க நெறியைக் கண்ட மக்கள் வழங்கிய பொருளைக்கொண்டு சிதம்பரத்தில் சைவப்பிரகாச வித்தியாசாலையையும் சென்னையில் வித்தியாநுபாலன அச்சியந்திரசாலையையும் நிறுவினாரென்றும் குறிப்பிட்டுள்ளார். இக்கூற்று நாவலர் சரித்திரத்திற்கு முற்றிலும் மாறுபட்ட கருத்தாகும். நாவலர் பெருமான் யாழ்ப்பாணத்திலிருந்து பணத்தையும் பனைமரம் முதலியவற்றையும் கொண்டுசென்றாரென்ற வரலாற்றை அன்னாருக்குத் தெரிவிக்கவேண்டும்.

சிதம்பரம் நாவலர் தர்ம நற்பொறுப்பாளர் திரு தி. க. இராசேஸ்வரனிடம் இதற்கு விளக்கம் கோருவதெனவும் முடிவுசெய்யப்பட்டது.

## டாக்டாகளின்—

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தில் ஆறு வருடங்களுக்குட்பட்ட சேவையிலுள்ளவர்களுக்கு இடமளிக்கப்படுவதில்லையென்றும் இந்தவித பாகுபாடுகள் கழுத்தறுப்பு என்று 1976-ம் ஆண்டில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த இன்றைய பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவே எடுத்துக்காட்டியிருந்தாரென்றும் எடுத்துக்காட்டினார்.

இந்தக் கழுத்தறுப்பு வியத்தைத் தாம் சொல்லவில்லையென்றும் இன்றைய பிரதமரே 1976-ம் ஆண்டில் கூறியிருப்பது 1977-ம் ஆண்டில் எவ்விதம் நியாயமாகுமென்றும் திரு. யோகேஸ்வரன் எடுத்துக் கூறி ஹன்சார்ட்டிலிருந்து ஜே. ஆர். பேசியதையும் வாசித்துக்காட்டினார்

இதன் பின் அதே ஹன்சார்டை வாங்கிப் பார்த்த பிரதமர் திரு ஜே ஆர். இது தவிர கழுத்தறுப்பு இனியும் நடைபெறமாட்டாதென்றும் இவ்வித பாகுபாடுகள் இடம்பெறமாட்டாதென்றும் கூறினார்.

## யாழ். எம். பிக்கு பாராட்டு

(அரியாலை)

ஸ்தல ஸ்தாபன வீடமைப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீடு குழுநிலை விவாதத்தின்போது சனசமூகநிலையங்களுக்கு வழங்கப்படும் வருடாந்த நன்கொடைப்பணத்தை மூன்று மடங்காக அதிகரித்துக் கொடுக்க வேண்டுமென்று யாழ்ப்பாணத்தொகுதி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. வெ. யோகேஸ்வரன் வற்புறுத்தியமைக்கு நன்றி தெரிவித்து யாழ். மாநகர சனசமூகநிலையச் சமாஜச் செயலாளர் கடிதம் எழுதியுள்ளார்.

நீண்டகாலமாக சனசமூக நிலையங்கள் விடுத்த வேண்டுகோளை தேசிய அரசுப் பேரவையில் வற்புறுத்தியதுடன் கௌரவ அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவந்தமைக்கும் அக்கடிதத்தில் நன்றி தெரிவித்துள்ளார்.

## மரண அறிவித்தல்

### வை. கனகரட்ணம்

குப்பிளானைச் சேர்ந்த காலஞ்சென்ற உதவியாசிரியர் வைத்திலிங்கத்தினதும், செல்லமுத்துவினதும் செல்வப் புதல்வன் கனகரட்ணம் அகால மரணமானார். இவர் குப்பிளான் விக்கினேஸ்வரா வித்தியாசாலை, ஸ்கந்தவரோதயா கல்லூரி சுன்னாகம், யாழ். பல்தொழில்நுட்ப கல்லூரியாகிய வற்றின் பழைய மாணவராவார். இவர் லண்டனில் வசிப்பவர்களாகிய திரு பாலசிங்கம், திரு. சிவசுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரனும், சாந்தமலரின் மைத்துனரும், மலேசியாவில் வசிப்பவர்களாகிய நாகலிங்கம், செல்லையா ஆகியோரதும், குப்பிளானில் வசிப்பவர்களாகிய நல்லையா, கந்தையா, ஆச்சிமுத்து ஆகியோரதும் மருமகனுமாவார். அன்னாரது சமைக்கிரிகைகள் (25-12-77) ஞாயிறு மு. ப. 10-00மணிக்கு குப்பிளான் மயானத்தில் நடைபெறும்.

8011

வாகன உரிமையாளர்களே

உங்கட்கு தேவையான
இறக்குமதி செய்யப்பட்ட ரயர், ரியூப் வகைகட்கு
இன்றே விஜயம் செய்யுங்கள்.
விநியோகஸ்தர்:
ஸ்ரீ லங்கா ஸ்ரேற்றேடிங்
(ஜெனரல்) கார்ப்பிரேசன்.

எஸ். வி. முருகேசு
நம். 154, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

8012

சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு

டொலர் அலுமினியம்

இப்பத்திரிகை "ஈழநாடு. லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 25-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.

# பரமேஸ் கோணேஸ்
புரடக்ஷன்ஸ்

14-12-77 அன்று

உயர் திரு. தியாகராசா அவர்களால்
(எஸ். ரி. ஆர். பிலிம்ஸ்)

ஆரம்பிக்கப்பட்ட எமது ஸ்தாபனத்திற்கு வருகை தந்து ஆதரவளித்த அனைவருக்கும்

எமது நன்றிகள்

தலைமை அலுவலகம்:
திருகோணமலை.

கடிதத்தொடர்புகள்:
9, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

---

ஆகஸ்ட் வெளியீடு!

லஷ்மி மூவீஸ் அளிக்கும்



# காலம் பதில் சொல்லும்

இசை,
ஈழத்து மெல்லிசை மன்னன் எம். பி பரமேஷ்
(திருக்கோணமலை)

கதை-வசனம்-பாடல்கள்
நல்லூர் மனோகரன்

சண்டைப் பயிற்சி
நேரு
(நெஞ்சுக்குத் தெரியும் புகழ்)

பின்னணி
எம். பி. பரமேஷ், மாலினி பரமேஷ், விஜிதா (தெல்லிப்பழை)

---

எம். பி. பரமேஷ், மாலினி பரமேஷ்

பாடிய 14 பாடல் கொண்ட
## 33 R. P. M.
இசைத்தட்டுகள் வெளிவருகின்றன

தொடர்புகள்
பரமேஸ் கோணேஸ் புரடக்ஷன்ஸ்

---

ஆங்கிலம் அவசியம்

தக்கமுறையில் ஆங்கிலம் கற்றுத்தேற



# பல்மொழிக் கலா நிலையம்

(சாந்தி சினிமாவிற்கு முன்பு)
யாழ்ப்பாணம்.

---

நத்தார் வாழ்த்துக்கள்



# தரன் ஸ்ருடியோ

நவீன சந்தை, 9, மேல்மாடி
யாழ்ப்பாணம்.

---

வடமகாண மக்கள் அனைவருக்கும்
எமது நத்தார் வாழ்த்துக்கள்

# ரோரு லிமிட்டெட்

யாழ்ப்பாணம்.

---

## திறீ கொயின்ஸ்

நத்தார் வாழ்த்துடன்
நற்செய்தி ஒன்று
ஏப்ரல் 14 முதல்
புதிய அமைப்புப் பெறுகின்றது
திறீ கொயின்ஸ்
ஹோட்டேல்
நல்லுணவுக்கு நாளும்
நாடுங்கள்



# திறீ கொயின்ஸ்

கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.

---

ஸ்ராண்ட் மாஸ்டர் நேருவின்
நத்தார் வாழ்த்துக்கள்

★ நெஞ்சுக்குத் தெரியும்
★ வாடைக் காற்று
★ தெய்வம் தந்த வீடு
★ உலகம் ஒன்றுதான்
★ காலம் பதில் சொல்லும்

ஆகிய படங்களில் எனது திறமையைப் பாராட்டிய அத்தனை ஈழத்திரைப்படக் கலைஞர்களுக்கும்

எனது அன்பின் வாழ்த்துக்கள்.

---

எமது வாடிக்கையாளர்களுக்கு நத்தார் வாழ்த்துக்கள்

# ஆர் எஸ் அச்சகம்

149, கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.

போன்: 7669

கிளை: ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

ஆர் எஸ் அச்சகம், யாழ்ப்பாணம்.

முதன்முதலாக இலங்கைத்தமிழிசைத்தட்டு தயாரித்தவர்கள்.

10 வது ஆண்டு விழா '77.

# பரமேஸ் கோணேஸ் புரடக்ஷன்ஸ்

ஸ்தாபகர்கள்:
க்ஷ்.பி. பரமேஷ்
எம்.பி. கோணேஷ்
எஸ். இ. மகேஷ்

திருக்கோணமலை. கடிதத்தொடர்பு: 9, ஸ்ரான்லி வீதி, யாழ்.

மெல்லிசை மன்னர், இயல் இசைக்கலைஞர், இசையமைப்பாளர் திலகம், மக்களிசைக்கலைஞர்.

